ISSN 2012 - 6700

இதழ் - 23

# பூங்காவனம்


கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. லறீனா அப்துல் ஹக்

பூங்காவனம் இலக்கிய வட்டம்

**திருமதி ஏ.சி. ஜரீனா முஸ்தபா எழுதிய**
**'மீண்டும் ஒரு வசந்தம்' சிறுகதை நூல் விற்பனைக்கு உண்டு.**




## நூல் பற்றிய தகவல்கள்:-

சிறுகதை நூல் - மீண்டும் ஒரு வசந்தம்
நூலாசிரியர் - திருமதி ஏ.சி. ஜரீனா முஸ்தபா
வெளியீடு - பூங்காவனம் இலக்கிய வட்டம்
விலை - 300 ரூபாய்
தொலைபேசி - 0094115020936, 0094115050983

## இந்த நூல் கிடைக்கும் இடங்கள்:-

இஸ்லாமிக் புக் ஹவுஸ் - கொழும்பு 09.
ஹாதி புத்தக நிலையம் - கொழும்பு 11.
பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு 11.

வீட்டிலிருந்து புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவர்கள் தபால் மூலம் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தபால் செலவையும் இணைத்தே செலுத்த வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் - A.C. Jareena Musthafa, Welivita Post Office என மணியோடர் எழுத்து அதனை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் நூலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

A.C. Jareena Musthafa
No. 120 H, Bogahawatte Road,
Welivita, Kaduwela, Sri Lanka.
TP – 0094 115020936, 0094 115050983

**குறிப்பு:- இந்த நூல் ஏ.சி. ஜரீனா முஸ்தபாவின் 08 ஆவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.**

# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 23 - 2015 டிசம்பர்
ISSN 2012 - 6700

**பிரதம ஆசிரியர்**

ரிம்ஸா முஹம்மத்

**துணை ஆசிரியர்கள்**

எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

**ஆலோசகர்**

ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

**வங்கித் தொடர்புகளுக்கு**

Commercial Bank,
Mount Lavinia Branch,
M.F. Rimza
A/C No :- 8930020287.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின் (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக் கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | - | 100/= |
| தபால் மூலம் | - | 140/= |
| வருட சந்தா | - | 600/= |

**தொடர்புகளுக்கு**

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580

புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்...

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று மக்களின் அன்றாட வாழ்க்கைப்போக்கு முன்னேற்றமடைந்து வருகின்றது. பொதுவாக நோக்குமிடத்து சராசரியாக அனைவரும் ஒரு தொழிலுக்குச் சென்று தமது வருவாயை அதிகரித்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டின் அந்நிய செலாவணியை பெருவாரியாக ஈட்டித் தருவதில் தேயிலை முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு போதியளவு வேதனம் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அடிக்கடி ஊடகங்கள் வாயிலாக நாம் அறியும் பிரச்சினைகளில் முக்கியமானது.

நாட்டின் அபிவிருத்தியில் கணிசமான பங்களிப்பை நல்கி வரும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையை எடுத்துநோக்கினால் அது பின்தங்கிய நிலையில் காணப்படுவதே நிதர்சனம். லயன் குடியிருப்புகளாக இருக்கும் அவர்களின் வதிவிடங்கள் அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு இடைஞ்சலான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளதுடன் அடிப்படை சுகாதார வசதிகளை இழந்து நிற்கின்றன.

டிசம்பர் 15 ஆம் திகதி சர்வதேச தேயிலை தினமாகக் கொண்டாடப்பட்டு வரும் நிலையில்கூட தொழிலாளர்களின் நலன்கள் கருத்திற் கொள்ளளப்படுகின்றனவா என்ற ஐயம் நிலவுகிறது. நாளாந்த வாழ்க்கையில் எவ்வித ஒட்டுதலுமின்றி வாழ்ந்து வரும் அவர்களின் வாழ்க்கை பரிதாபத்துக்குரியது. கோதுமை மாவும், தேங்காய்ச் சம்பலும் அவர்களின் அன்றாட உணவாக இருந்து வருவது நம்மில் எத்தனைப் பேருக்குத் தெரிந்திருக்கிறது? கவிஞர் சி.வி அவர்கள் எழுதிய தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையில் இடம்பெறும் கீழுள்ள வரிகள் மனதைப் பிசைகிறது.

ஆழப் புதைந்த தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும் ஏறி மிதித்து இங்கெவர் வாழவோ தன்னுயிர்த் தருவான்..

தோட்டத் தொழிலாளர்கள் பற்றி எல்லா படைப்பாளிகளும் தமது எழுத்துக்களினூடாக குரல் கொடுத்து வருவது பாராட்டுக்குரியது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறை மாற்றப்பட வேண்டும். அவர்கள் கேட்டு நிற்கும் உரிமைகள் ஏற்கப்பட வேண்டும்.!!!

ஆசிரியர்

# பூங்காவினுள்ளே

## நேர்காணல்

திருமதி. லறீனா அப்துல் ஹக்

## கவிதைகள்

பதுளை பாஹிரா
ஏ.சீ. ஜரீனா முஸ்தபா
எம்.எஸ்.எம். சப்ரி
நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்
மருதூர் ஜமால்தீன்
கா. தவபாலன்
கெக்கிராவ சாஜஹான்

## சிறுகதைகள்

எஸ்.ஆர். பாலசந்திரன்
சூசை எட்வேட்

## குறுங்கதைகள்

எம்.எம். அலி அக்பர்

## உருவகக் கதைகள்

எஸ். முத்துமீரான்

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்
கா. விசயரத்தினம்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா



# நேர்காணல்


## திருமதி. லறீனா அப்துல் ஹக்

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்

**01. உங்களைப் பற்றிய அறிமுகத்தையும் உங்களது இலக்கியப் பிரவேசத்தின் பின்புலம் பற்றியும் கூறுங்கள்?**

என்னுடைய முழுப்பெயர் லறீனா அப்துல் ஹக். பிறப்பிடம் மாத்தளை. என்னுடைய தாயார் பௌசுல் ஹினாயா. மாத்தளை ஃபர்வீன் என்ற புனைப் பெயரில் பத்திரிகைகளில் 30க்கும் அதிகமான தொடர் கதைகளை எழுதியுள்ளார். "பாட்டுக்குப் பாட்டு" நிகழ்ச்சியில் பங்குபற்றி எப்போதும் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு வருவார். நல்ல இனிய குரல்வளம் அவருக்கு. அவரைப் பின்பற்றி, என்னுடைய 09 வயதில் பிரபல அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் தயாரித்தளித்த "பாட்டுக்குப் பாட்டு" போட்டியில் நானும் பங்குபற்றி இரண்டாம் பரிசு பெற்றமை ஓர் இனிய ஞாபகம்தான். அவ்வாறே, ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சை தமிழ் வினாப்பத்திரத்தில் எழுதிய கதைதான் என்னுடைய முதல் கதையாகும். 12 வயதில் நான் எழுதிய "ஓ! பஸ்ஸே!" என்ற கவிதை பிற்காலத்தில் வீரகேசரியில் பிரசுரமானது. இதுவே பத்திரிகையில் பிரசுரமான எனது முதலாவது படைப்பாகும். மேலும் தமிழ்மொழித்தினம், சிங்கள மற்றும் ஆங்கில மொழித்தினப் போட்டிகள், மீலாத் விழாப் போட்டிகள் மற்றும் கலை விழாக்கள் என் கலை மற்றும் எழுத்தாற்றல் வளரக் களம் அமைத்துத் தந்தன.

என்னுடைய தந்தை கலகெதர எம்.எம். அப்துல் ஹக் பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றினாலும், சிங்கள சினிமாத் துறையின் பிரபல இசையமைப்பாளராகவும் இருந்தவர். "சுஜீவா", "சுனேத்ரா", "சூகிரி கெல்ல", "கீதா", "ஒபய் மமய்" என்பன அவர் இசையமைத்த திரைப்படங்கள். ஜோதிபாலவின் விருதுபெற்ற பிரபல பாடலான "சந்தன எல்லென் நாலா" பாடல் என்னுடைய தந்தையின் இசையமைப்பில் உருவானதுதான். என்னுடைய தாய்வழிப் பாட்டனார் ஓர் இந்தியர். திருநெல்வேலிக்காரர். சித்த வைத்தியராய் இருந்த அவர், கர்நாடக சங்கீதத்தில் குறிப்பிடத்தக்க பயிற்சி உடையவராய் இருந்தவர். அவருடைய கம்பீரக் குரலில், "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா, செல்வக் களஞ்சியமே!" என்ற பாரதி பாடலைக் கேட்டு அனுபவிப்பது ஒரு சுகானுபவம்தான். இந்தப்




பின்னணியும் நான் கல்வி கற்ற மாத்தளை ஆமீனா மகளிர் கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் அதிபரின் ஊக்குவிப்புமே என்னை எழுத்து மற்றும் கலைத் துறைகளில் ஈடுபடுத்தின எனலாம்.


**02. இதுவரை வெளியிட்ட புத்தகங்கள் / ஆக்கங்கள் பற்றிக் கூறுங்கள்?**

01. எருமை மாடும் துளசிச்செடியும் (சிறுகதைத் தொகுதி) - 2003
02. வீசுக புயலே! (கவிதைத் தொகுதி) - 2003
03. தமிழ்மொழியும் இலக்கியமும்: சில சிந்தனைகள் (ஆய்வுக் கட்டுரைத் தொகுதி) 2003
04. ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும் (நாவல்) 2004
05. செ. கணேசலிங்கனின் அண்மைக்கால நாவல்களில் பெண் பாத்திரங்கள்: ஒரு பெண்ணிலை நோக்கு (ஆய்வுநூல்) - 2004
06. மௌனத்தின் ஓசைகள் - மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதி 2008
07. வார்த்தைகளின் வலி தெரியாமல்... - சமூகவியல் கட்டுரைகள் 2012
08. "பொருள் வெளி" ஆய்வுக் கட்டுரைத் தொகுதி 2012
09. நீட்சிபெறும் சொற்கள் - கட்டுரைத் தொகுதி 2015
10. சுயமி - மெல்லிசைப் பாடல்கள் இறுவட்டு 2015

இவை தவிர, "நம் அயலவர்கள்" எனும் சிறுகதைத் தொகுதிக்காக 05 சிங்களச் சிறுகதைகளைத் தமிழிலும், "அசல் வெசி அப்பி" எனும் சிங்களச் சிறுகதைத் தொகுதிக்காக ரஞ்சகுமாரின் "கோளறு பதிகம்" சிறுகதையை (தம்மிக்க ஜயசிங்ஹ என்பாருடன் இணைந்து) சிங்கள மொழியிலும் மொழியாக்கம் செய்துள்ளேன். மேலும், ஆங்கிலத்திலிருந்து தமிழில் உரைகள், கட்டுரைகளை மொழிமாற்றம் செய்துள்ளேன். நான் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ள ஹிஸ்ஸல்லே தம்மரத்தினத் தேரரின் "சிங்கள மொழியில் தமிழ்மொழியின் செல்வாக்கு", மார்ட்டின் விக்ரமசிங்கவின் "கம்பெரலிய", மஞ்சுள வெடிவர்தனவின் "பத்தலங்குண்டுவ" எனும் சிங்கள நூல்களின் செவ்வையாக்கத்தில் ஈடுபட்டு வருகிறேன். அது முடிந்ததும் விரைவில் நூல்களைச் வெளியிடும் உத்தேசம் உண்டு. http://nilapenn.com/என்பது என்னுடைய இணையத்தளமாகும்.




**03. உங்கள் படைப்புகளுக்குக் கிடைத்த பாராட்டுக்கள், பரிசுகள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**




**ஆய்வு**

♥ இலங்கைத் தமிழ் இலக்கியப் பேரவையின் விருது
நூல்: பொருள்வெளி

**சிறுகதை**

♥ வீரகேசரி பவளவிழா சிறுகதைப் போட்டி (2005) 03 ஆம் பரிசு
சிறுகதை: வேரில் வைத்த தீ

♥ அமரர் வரப்பிரகாஷ் நினைவுதின சிறுகதைப் போட்டி (பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம்) (2000) 02ஆம் பரிசு
சிறுகதை: எருமை மாடும் துளசிச் செடியும்

♥ அவுஸ்திரேலிய கலை இலக்கிய சங்கத்தின் பத்தாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட சர்வதேச சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு (2010)
சிறுகதை: எனக்கான "வெளி"


**கவிதை**

♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் : 01 ஆம் பரிசு (2000)

♥ அமரர் வரப்பிரகாஷ் நினைவுதின கவிதைப் போட்டி (பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம்) (2000) 02 ஆம் பரிசு

**பாடல்**

♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் : பாடல் - 01 ஆம் பரிசு (2000)




♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் :
03 ஆம் பரிசு (1993, 1995)

♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் :
02 ஆம் பரிசு (1992)

**சிறுவர் இலக்கியம்**

♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் :




02 ஆம் பரிசு (2003)

♥ தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பரிசளிப்புப் போட்டிகள் :
02 ஆம் பரிசு (1994)

**நாடகம்**

♥ பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க நாடகப் போட்டி :
நினைவில் நின்ற நடிகைக்கான சுழற்கேடய விருது (1998)
நாடகம்: இதுவரை இவர்கள்...

**கட்டுரை**


♥ ''நமக்கென்றொரு நாளிதழ்: பிரச்சினைகளும் சவால்களும்" என்ற தலைப்பில் "பாலைவனத்தூது" வலைதளம் நடத்திய சர்வதேச கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு.

**பாடல் இயற்றுதல்** (வரிகள், மெட்டு, இசையமைப்பு)


♥ பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்க வருடாந்தப் போட்டிகள் : 03 ஆம் பரிசு (1999)

♥ வவுனியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால் 2003 ஆம் ஆண்டு ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினவிழாவில், "பல்துறை ஆற்றல் கொண்ட முஸ்லிம் பெண்"ணுக்கான விருது கிடைக்கப்பெற்றது.

**03. உங்களது பாடசாலைக் காலம், தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா?**





நான் மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரியில் பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரை கல்வி கற்றேன். என்னைப் பாலூட்டி வளர்த்தவர் என் அன்னை எனில், என்னைச் சீராட்டி வளர்த்த கலைத்தாய் மாத்தளை ஆமினா. எனது கல்விக்கு மட்டுமின்றி, எனக்குள் மறைந்திருந்த திறமைகளை இனங்கண்டு வளர்த்துவிட்டவர்கள் ஆமினாவின் ஆசிரியர்களும் அதிபருமே என்பதை நன்றியோடு நினைவுகூர்கின்றேன். அதனால்தான் நான் இயற்றி, மெட்டமைத்து, இசையமைத்துப் பாடிய மெல்லிசைப்பாடல் இறுவட்டினை "மா/




ஆமினா மகளிர் கல்லூரியின் நினைவுகளுக்கு"ச் சமர்ப்பித்துள்ளேன். வறுமையில் உழன்ற காலத்தே என் ஆசிரியர்களில் அனேகமானவர்கள் என்னைக் கனிவோடு நடத்தி, பெரும் பக்கபலமாக இருந்தார்கள். திருமதி வஜீஹா மக்கீன், திருமதி ஆயிஷா இஸ்ஸதீன் ஆகிய ஆசிரியைகள் விஞ்ஞான, கணித பாடங்களில் நாம் அனைவருமே சித்தியடைய வேண்டும் என்ற தணியாத ஆவலினால் பாடசாலை விட்டு முற்றிலும் இலவசமாக மேலதிக வகுப்புகளை வைப்பார்கள். ஏனைய ஆசிரியர்களும் நம் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையோடு உழைத்தார்கள். ஆக, அந்த அர்ப்பணிப்பு உணர்வினை நாம் அவர்களிடமிருந்தே பெற்றோம்.

மேலும், திறமைக்கு முதலிடம் அளித்து மாணவத் தலைவியராய் பணிகளை நம்மிடம் ஒப்படைத்ததன் அடியாய் கடமையுணர்வை, பொறுப்புணர்வை வளர்த்துக்கொண்டோம். கூடைப்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம், உயரம் பாய்தல், தூரம் பாய்தல் முதலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பையும் அக்கல்லூரி நமக்கு அளித்ததன் விளைவாய் தோல்விகளைக் கண்டு துவளாத மனோதிடமும், தன்னம்பிக்கை உணர்வும், தொடர்ந்து போராடும் தன்முனைப்பும் நம்மிடம் ஊன்றி வளர்ந்தன எனலாம். அந்தவகையில் ஆமினாவில் இருந்து உருவாகிப் கல்வி, மருத்துவம், பொறியியல் முதலான பல்வேறு துறைகளில் ஒளிவீசும் பல மாணவிகளை நாம் கண்டுகொள்ள முடியும்.


பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக் கலைமாணிப்பட்டம் பெற்றபின் தமிழ்த் துறையில் இரண்டு வருடங்களும், மும்மொழித்துறைகளும் இணைந்து நெறிப்படுத்திய மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சுமார் நான்கு வருடங்களும் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். தற்போது சிங்களத் துறையில் வருகைநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றேன்.




**04. உங்களது இலக்கியப் படைப்பில் சிறப்பெனக் கருதுவது எதை?**

அப்படி ஒரு படைப்பை இனித்தான் தரவேண்டும் என நினைக்கிறேன். இதுவரை எழுதிய எதுவுமே எனக்குப் பூரண திருப்தியைத் தரவே இல்லை என்பதே உண்மை. அந்த விஷயத்தில் என் உள்ளம் நிரம்பாத வெற்றுக் குவளையாகவே

இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ், இனியேனும்... என்ற நம்பிக்கையோடு முன்னகர்ந்தபடி இருக்கின்றேன்.




**05. சமகாலத்து ஈழத்து இலக்கியம் பற்றிய உங்களது கணிப்பீடு என்ன?**

அவ்வாறு கணிப்பிடும் அளவுக்கெல்லாம் நான் பெரிய ஆள் இல்லை. ஆனால், இலக்கியத் துறையில் ஒப்பீட்டளவில் முன்னரிலும் பார்க்க பெண்களின் பங்குபற்றுதல் அதிகரித்து வருவது மன மகிழ்ச்சி தருகின்றது.

**06. மரபு ரீதியாக கவர்ந்த இலக்கியம், புதுமையாக கவர்ந்த இலக்கியம் விளக்க முடியுமா?**

சங்க இலக்கியங்கள் தொட்டு நவீன இலக்கியம் வரை பலதரப்பட்ட இலக்கியங்களையும் அவ்வவற்றுக்குரிய தனித்துவங்களை ஏற்று மதிப்பதால் தனிப்பட்டு ஒன்றிரண்டைச் சொல்வது அரிது எனக் கருதுகிறேன். என்றாலும், மிக அண்மையில் வாசித்த நூல்களுள் ரவிக்குமாரின் மழைமரம், தேன்மொழியின் நெற்குஞ்சம், தேவமுகுந்தனின் கண்ணீரினூடே தெரியும் வீதி, யோ. கர்ணனின் தேவதைகளின் தீட்டுத்துணி, ஏ.பி.எம் இத்ரீஸின் புன்னகைக்கும் நபிகள், த. உருத்திராவின் ஆண்கோணி, பேராசிரியர் மௌனகுருவின் சார்வாகன் என்பன என்னை மிகவுமே கவர்ந்தன. இன்னும் நிறைய நூல்களை வாங்கி வைத்துள்ளேன். வாசிப்பதோடு அவை குறித்து எழுதவும் வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் உண்டு. இன்ஷா அல்லாஹ், பார்ப்போம்.

**07. எழுத்துலக வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**



நிறைய உள்ளன. என்றாலும் ஒருசிலவற்றைப் பகிர்ந்துகொள்கிறேன். மித்திரன் பத்திரிகையில் ஒரே காலகட்டத்தில் என்னுடைய தொடர்கதையும் என் தாயார் மாத்தளை ∴. பர்வீனின் தொடர்கதையும் வெளிவந்தமை ஓர் இனிய அனுபவம். அவ்வாறே, என்னுடைய முதலாவது நூல் வெளியீட்டு விழா மறக்க முடியாத மற்றோர் அனுபவம். எனது முதல் சிறுகதைத் தொகுதியான "எருமை மாடும் துளசிச் செடியும்", கவிதைத் தொகுதி "வீசுக புயலே!" இரண்டையும் ஒருமிக்க நான் கல்வி



கற்ற மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரியிலேயே வெளியிட்டதும், பெருந்திரளானோர் அதில் கலந்துகொண்டு சிறப்பித்தமையும் என்றுமே மறக்க முடியாத இனிய நினைவு. விழாவை மிக விமரிசையாக ஒழுங்குசெய்த மாத்தளை இஸ்லாமிய இலக்கியப் பேரவைச் செயலாளர் பீர் முஹம்மது அவர்கள் என் நன்றிக்குரியவர். அடுத்து, கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களின் கையெழுத்துப் பிரதியான "இஸ்லாமியச் சரித்திரக் கதைகள்" எனும் கதைகூறும் கவிதை நூலினைப் பதிப்புக்கும் பொறுப்பினை ஏற்றமை என் வாழ்வின் மகத்தான ஒரு தருணம் எனக்கருதுகிறேன். மழையில் கரைந்த அவற்றின் சில பகுதிகளை மீட்டெடுப்பதில் எதிர்கொண்ட சவால்கள் மிகவும் சுவாரஷ்யமானவை. அவை குறித்து அந்நூலில் எழுதியுள்ளேன். இன்ஷா அல்லாஹ் அது வெகு விரைவில் வெளிவரும்.

**08. சிறுகதைகளினூடாக சமூகத்துக்குள் ஏற்படுத்தக்கூடிய பல மாற்றங்களில் நீங்கள் எதை இலக்காகக் கொள்கிறீர்கள்?**

மிகக் குறிப்பிட்டுச் சொல்வதானால், பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய புரிதலையும் விழிப்புணர்வையும் பரவலாக்கும் முனைப்பே எனக்குள் உள்ளது. அவ்வாறு பெரிதும் பெண்களின் பிரச்சினைகளைச் சுட்டி எழுதும்போது "மேற்கின் மூளைச் சலவைக்கு உட்பட்ட பெண்ணியவாதி" என்று முத்திரை குத்தி நம்மை ஓரம்கட்டும் முயற்சிகள் ஆங்காங்கே மேலெழுந்தபோதிலும், தளர்ந்து ஒதுங்கிவிடும் உத்தேசம் இல்லை. புரிந்துணர்வுள்ள பல சகோதர சகோதரிகள் எப்போதும் எனக்குப் பக்கபலமாக இருப்பது மிகவும் நிறைவைத் தருகின்றது என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.



**09. இலங்கையில் வெளிவரும் கவிதைப் படைப்புகள் பற்றி என்ன சொல்வீர்கள்?**

அவை மிகவும் காத்திரமாகவும் கூர்மையான சமூக விமர்சனங்களோடும் வெளிவருவது

மகிழ்ச்சியளிக்கிறது. குறிப்பாகப் பெண்கள் இத்துறையில் பெருமளவு பங்கேற்கிறார்கள். அது மிகுந்த மனநிறைவுக்குரிய ஒன்று. ஒருவிஷயத்தை இங்கு சிறப்பாகக் குறிப்பிட விழைகின்றேன். பெண்கள் தமது கவிதைகளை வெறுமனே புலம்பலாக, ஒப்பாரியாக முன்வைக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை சமூகத்தளத்தில் சிலர் தொடர்ந்து முன்வைக்கிறார்கள். தமிழிலக்கியம் உள்ளிட்டு உலகின் பிறமொழிக் கவிதை வரலாறு பற்றிய அடிப்படை அறிவற்ற சிலரின் இக்குற்றச்சாட்டு மிக இலகுவாகப் புறந்தள்ளக்கூடியதுதான் என்றாலும், அக்கருத்துக்களை சரியானது எனக்கருதும் பிறருக்காக ஒரு விளக்கத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதாவது, காலங்காலமாக கவிதை என்ற வடிவம் மனித மனதின் நுண்ணுணர்வுகளைச் சொல்லும் மிகக் காத்திரமானதும் வாலாயமானதுமான ஓர் ஊடகமாகவே இயங்கிவருகிறது. காலந்தோறும் மொழிகளில் எல்லாம் இன்பத்தைப் போலவே துன்பத்தைப் பாடவும் கவிதையே களமாய் இருந்துவருகிறது. சங்க காலம் முதல் இதனை நாம் காணலாம். அவ்வாறு துயர்தோய்ந்த உணர்வு வெளிப்பாட்டை வெற்றுப் புலம்பலாகவும் ஒப்பாரியாகவும் கொள்வதானால், அகத்திணைசார் முல்லைநில, பாலைநில மற்றும் நெய்தல் நிலப்பாடல்கள் சொல்லும் இருத்தல் மற்றும் இரங்கற் பாடல்களையும், பிரிதற் பாடல்களையும்கூட நாம் புறந்தள்ள வேண்டியதிருக்கும். அப்படி யாரும் புறந்தள்ளவில்லை. மாறாக, அன்றைய மக்களின் வாழ்வியலையும் மனவுணர்வுகளையும் படம்பிடித்துக்காட்டும் இலக்கியப் பொக்கிஷங்களாக அவை இன்றும் போற்றப்படுகின்றன.

அவ்வாறே, மிகப் பெரும்பாலான பெண்களின் கவிதைகளில் துயரும் வலியுமே அதிகம் மேலெழுகின்றன என்றுகொண்டால், அவற்றை அடியாகக் கொண்டு அவர்களினதும் சமூகத்தினதும் நிலைமை ஆராயப்படல் வேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் வறுமை, வன்முறை மற்றும் போர் முதலான பல்வேறு காரணங்களின் விளைவாகப் பெரிதும் பாதிக்கப்படும் பெண்களின் துக்கமும் இழப்பும் இரங்கலும் கேலிக்குரியவை அல்ல. அவை சமூகத்தின் ஒரு குறுக்குவெட்டுமுகத் தோற்றமே என்ற புரிதல் பரவலாக வேண்டும். ஏன் பெண்களில் மிகப்பெரும்பாலானோர் அவ்விதம் எழுதுகிறார்கள், அவர்களின் மன நெருக்கடிகளைக் கட்டமைக்கும் காரணிகள் எவை என்று சமூகவியல் நோக்கோடு ஆராயப்படுவதன் அடியாகவே அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி நாம் நகரமுடியும் என்பதே நிதர்சனம். மாறாக, அக்குரல்களை நையாண்டி செய்து, அவற்றை எழ முடியாமல் இருட்டடிப்புச் செய்வதும், அக்குரல்களை மானசீக நெருக்கடிகளைப் பிரயோகித்து முடக்கிப் போட முயற்சிப்பதுமான அணுகுமுறைகளின் பின்னால் உள்ள குரூர "அரசியல்" கண்டிக்கத்தக்கது.

**11. உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார்?**

நிறையப் பேர் இருப்பதால் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு விரும்பவில்லை.

**12. புத்தகம், இணையத்தளங்கள், பேஸ்புக் என்பன இலக்கியத்தை எவ்விதம் வளர்க்கின்றன?**

இன்று இலக்கியம் பரவலான தளத்தைச் சென்றடைவதற்கு மேற்கண்ட எல்லா வடிவங்களுமே பெரிதும் துணைநிற்கின்றன என்றால் மிகையில்லை. அதேவேளை, இணையப் பாவனையின் விளைவாகப் படைப்பாக்கங்கள் பெருகி உள்ளமை கவனிக்கத்தக்கது. பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களின் வருகையால், தரமற்ற படைப்புகள் முதற் தடவையிலேயே எந்தத் திருத்தமோ மேற்பார்வையோ இன்றி நேரடியாகவே பிரசுரமாவதால் தரமற்ற படைப்புகள் அதிகரித்துவருவதான குற்றச்சாட்டுகளும் எழாமல் இல்லை. அதேவேளை, பெண்களுக்கான படைப்பு வெளி இவற்றினூடே அதிகரித்திருப்பது மிக முக்கியமாகக் கவனங்கொள்ள வேண்டிய ஒன்று என்றே நினைக்கிறேன்.

புத்தகம் ஒன்றை வெளியிட ஆகும் செலவையும் சிரமங்களையும் அனுபவித்தவர்களுக்கு அதில் உள்ள சவால்கள் நன்கு தெரியும். ஆக, எழுத்தாற்றல் இருந்தாலும் கூட எல்லாப் பெண்களுக்கும் (ஆண்களுக்கும்தான்) தமது படைப்புகளை நூலுருவில் கொண்டுவரும் சாத்தியப்பாடு வாய்த்துவிடுவதில்லை. பெருங் கஷ்டப்பட்டு ஒன்றோ இரண்டோ நூல்களை வெளியிட்டாலும், விற்பனைசெய்து செய்த செலவை மீட்டெடுப்பதே குதிரைக் கொம்பாய் மாறிவிடும்போது ஒருகட்டத்தில் பின்வாங்கிவிடவும் நேர்கிறது. ஆனால், இணையவெளி அதற்கான மாற்றீடாய் அமைந்துள்ளது. தாம் நினைப்பதையும் எழுதுவதையும் சுதந்திரமாய் வெளிப்படுத்தும் பரந்த "வெளி"யினை இணையம் வழங்கி உள்ளது.

முகநூலும் வலைப்பூக்களும் இணையத் தளங்களும் மிக இலகுவான வெளியீட்டுத் தளமாக மாறியுள்ளமை அனேக பெண்களுக்கான "எழுத்துவெளி"யினை சாத்தியப்படுத்தி உள்ளது எனலாம். அதனை அவர்கள் முற்றுமுழுதாகக் காத்திரமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களா, இல்லையா என்பது அவரவரைப் பொறுத்த விடயம். அதேவேளை, பெரும் எழுத்தாளர்கள், முன்னோடிகளுடனும் சமமாகப் பழக, உரையாட, கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் சமூக வலைதளங்கள் சாத்தியமாக்கி உள்ளமை ஆரோக்கியமான ஒருநிலைதான் என்பேன்.

**13. தமிழ் இலக்கியத்தில் நீங்கள் அதிகம் ஆர்வம் காட்டும் துறை எது?**

மொழிபெயர்ப்பும் ஆய்வும்

**14. வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

எழுத்துத்துறையில் நானுமே இன்னும் வளர்ந்துவரும் நிலையிலேயே உள்ளேன். என்றாலும் எனக்கும், வயதில் என்னிலும் இளையவர்களுக்கும் கூறிக்கொள்ள விழைவது, நிறைய வாசிப்பும் தேடலும் இருந்தால்தான் காலத்தை வென்று நிற்கும் நல்ல பல படைப்புகளை உருவாக்க முடியும். கூடியவரையில் எழுத்து மற்றும் வசனப்பிழைகள் இன்றி எழுதும் பயிற்சியை அதிகரித்துக்கொள்ளுதல் நன்று.

**15. நம் நாட்டில் வெளிவரும் மொழிபெயர்ப்புகள் பற்றி என்ன கூறவிழைகிறீர்கள்?**

சிங்கள - தமிழ், தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்புக்களைப் பொறுத்தவரையில் அவை இன்னுமின்னும் அதிகரிக்கப்படவும் செம்மைப்படுத்தப்படவும் பரவலாக்கப்படவும் வேண்டும். இதுவரையும் வந்துள்ள இலக்கிய மொழிபெயர்ப்புகளில் அனேகமானவை போர் மற்றும் போருக்குப் பின்னான நிலைமைகளை வெளிக்கொணரும் வகையிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. போரின் அவலங்கள் குறித்துச் சிங்கள மக்களும் அறிய வேண்டும் என்ற முனைப்பு தமிழ் எழுத்தாளர்களிடமும், தமிழ் எழுத்தாளர்களின் துயரங்களை நாமும் விளங்கித்தான் உள்ளோம் என்ற உணர்வுத் தோழமையை வெளிப்படுத்தும் உந்துதல் சிங்கள எழுத்தாளரிடையேயும் இருப்பது வரவேற்கத்தக்கதுதான். அதில் ஐயமில்லை.

ஆனால், அதுமட்டுமா இச்சமூகங்களுக்கு இடையிலான அடிப்படைப் பிரச்சினை என்ற கேள்வி இங்கு முக்கியமானது. அந்தவகையில், நம் நாட்டின் எல்லாச் சமூகங்களும் தமது அன்றாட வாழ்வில் அனுபவித்துவரும் துயரங்கள், ஊழல்கள், அடக்குமுறைகள், சுரண்டல்கள் முதலானவற்றையும் பரஸ்பரம் மொழிபெயர்ப்புகள் வழியே ஊடுகடத்துவதன் மூலம், சாதாரணப் பொதுமக்களின் பிரச்சினைகளை, இன்னொரு வகையில் சொல்வதானால் வர்க்க ரீதியான பிரச்சினைகளின் பொதுமைத்தன்மையை பரஸ்பரம் உணரவும் உணர்த்தவும் கூடியதாக இருக்கும். இதனடியாக, எல்லாப் பேதங்களையும் தாண்டி மக்கள் வர்க்கரீதியாக ஒன்றிணைந்து அவற்றை எதிர்கொண்டு வெல்லவும், அதிகார வர்க்கத்தின் அநீதிகளுக்கு எதிராகக் கரம்கோத்துச் செயற்படவும்கூடிய உந்துதலைப் பெறவும்கூடியதாக இருக்கும், சமூகக்குழுமங்களுக்கு இடையே வன்மத்தைத்தூண்டித் துண்டாடித் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள முனையும் ஆதிக்கவர்க்கத்தின் தந்திரங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் பெற முடியும். ஆகவே, அவ்வாறு மக்களனைவரும் சகோதரரே, எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் பல பொதுவானவையே என்பதை உணர்த்தும் படைப்புகளை நோக்கியே மொழிபெயர்ப்புக்கான கவனம் குவிமையம் கொள்ள வேண்டும். இது காலத்தின் கட்டாயத் தேவை ஆகும். அவ்வாறே, அச்சுக்குப் போகுமுன் மொழிபெயர்ப்புகளின் தரத்தினை உறுதிசெய்யத்தக்க அமைப்பு ரீதியான பொறிமுறையொன்றும் கட்டமைக்கப்படல் வேண்டும்!!!

# மனசாட்சி

நான் உலகத்தைப்பற்றி பேசுவதும்
உலகம் என்னைப்பற்றி விமர்சிப்பதும்
ஆளுமை செலுத்தும் மனசாட்சியின்
அழுத்தமும், ஆரோக்கியமும்,
அழுக்குப் பொதிகளை அகற்றும்படி
மனசாட்சி ஆணையிடும்போது
அடங்கிப் போவது
மனித தர்மத்தின் உச்சமே!

பகுத்தறிவுவாத பெருமைக்கும்
பலமுள்ள சமூக சிந்தனைக்கும்
முகவரிதரும் மனசாட்சியின் குரல்
தனிமனிதனை, தனித்துவ பெருமையிலே
தரணி முன் நிறுத்துகிறது உத்தமனாக!

மனசாட்சியை இழப்பதும்
இல்லாமல் செய்வதும்
மானிலத்தை அவமதிப்பதாகும்..
மனித புலத்திற்குள், வனவிலங்குகள்
வாசம் செய்வதாக!

மனசாட்சியைக் கொன்று
வாழ்தலென்பது,
காலமுனை சிரச்சேதம் செய்யும்
தருணமாகிவிடும்!

மனிதனுக்கும், மனசாட்சிக்கும்
இடைவெளியிருப்பின்
செங்கோல்கள் செயலிழந்துவிடும்..
பங்கப்படும் மூச்சுக்களில்
'பங்கசு'க் கிருமிகள் பெருகும்!!!

● பதுளை பாஹிரா

# உறங்கும் உண்மைகள்

சிறுகதை

● எஸ்.ஆர். பாலசந்திரன்

கோயில் மணி டாண் டாண் என்று அடித்தது. நேரம் மாலை ஏழு மணியிருக்கும். காரைவிட்டு இறங்கிய சந்திரன் கைகால்களைக் கழுவிவிட்டு பக்தி சிரத்தையாக உள்ளே நுழைந்தார். வழக்கமாகத் தன் மனைவியோடு வருபவர் தனியாக வருவதைக் கண்டதும் அர்ச்சகர் கேள்விக் குறியோடு பூசைத் தட்டை வாங்கினார். சந்திரன் தனது மனைவி கமலாவின் பெயரைச் சொல்லி அவள் நலம் பெறவேண்டி பற்றுச் சீட்டைக்கொடுத்தபோது விடயத்தை ஊகித்துக்கொண்ட அர்ச்சகர் பிரமாதமாக மந்திர உச்சாடனை செய்து பிரசாதங்களை அளித்தார். 'என்ன பிரச்சினை வந்தாலும் இந்த விநாயகர் தீர்த்துவைப்பார் பயப்படாமல் போங்கோ' என்றதும் சந்திரன் பெருமூச்சுவிட்டபடி நகர்ந்தார்.

சந்திரன் ஒரு ஸ்தாபனத்தின் உயர் அதிகாரி. வயது 40. மனைவி கமலா. இரண்டு பிள்ளைகள். கமலாவுக்கு சிறிதுகாலமாக காய்ச்சல் விடாமல் இருந்தது. சந்திரனுக்கு கவலை தொற்றிக்கொண்டது. மன ஆறுதலுக்காக கோயிலுக்குச் சென்றுவந்தவர் கண்ணில்தான் தூர இருந்த பெண்ணின் விம்பம் விழுந்தது.

'மைதிலி! நீயா? எவ்வளவு காலத்துக்குப் பிறகு?' என்று அவர் உள்ளம் துடித்தது. காரணம் மைதிலியின் கழுத்தில் தாலி இல்லை. நெற்றியில் சந்தனம் மேல் குங்குமம் இட்டிருந்தாள்.

மைதிலி கண்களை மூடி தியானித்துக் கொண்டிருந்தாள். அவளைத் தொந்தரவு செய்யாமல் வெளியே வந்து சீமெண்ட் ஆசனத்தில் அமர்ந்தார். நினைவு ஒருபறவை.. விரிக்கும் தன் சிறகை என்பது போல் அவருக்கு பழைய நினைவுகள் தலைதூக்கின.

சந்திரனும் மைதிலியும் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் ஒன்றாகப் படித்தவர்கள். மைதிலி மிக அழகானவள். கலகலவென கன்னத்தில் குழி விழச் சிரிப்பாள். சந்திரனும் நல்லவர். ஒழுக்கத்தோடு வாழ்பவர். இதை அறிந்த மைதிலி அவரோடு நட்புறவாடினாள்.

'என்ன சாமியாரே! சௌக்கியமா?' எனக் குறும்போடு அழைப்பாள். வணங்குவது போல பாவனை காட்டுவாள்.

சந்திரனின் மனம் மைதிலியை நாடியது. ஆனால் அவளிடம் தன் காதலைச் சொல்லப் பயந்தார். காரணம் மைதிலியின் சுபாவம் தன்னைப் பார்த்து பல்லைக் காட்டியவர்களைத் துரத்தியடிப்பாள். தேவையற்ற சலனங்களுக்கு அவள் இடங்கொடுக்காமல் இருந்தாள். மற்ற மாணவர்கள் அவளுக்குக் காதல் கடிதம் எழுதுவதை சந்திரனிடம் சொல்லிச் சிரிப்பாள்.

'ஏன் சாமியாரே ஆணும் பெண்ணும் நட்பாக இருக்கக் கூடாதா? உடனேயே காதல் கடிதம் எழுதுவதா? இப்போது காதலிப்பார்கள். பின்பு பெற்றோர் சம்மதிக்கவில்லை. சீதனம் வேண்டும் என்று கூறிவிடுவர். காதலாவது கத்தரிக்காயாவது? ஆனானப்பட்ட இராமனே சீதையை நெருப்பில் குதிக்கச் சொன்னவர் தானே? மனைவியைப் பணயப் பொருளாக வைத்து சூதாடி அரசவையில் சேலையை உரியும்போது மௌனமாயிருந்தவர் தருமபுத்திரர்..' என்பாள்.

மைதிலியின் வார்த்தைகளைக் கேட்ட சந்திரன் தன் காதலை மனதுக்குள்ளேயே வைத்துப் பூட்டிவிட்டார். பின்பு இருவரும் சகஜமாகப் பழகினார்கள். அவர் பட்டயக் கணக்காளராக பதவி பெற்றார். மைதிலி ஒரு ஆசிரியராகி, வேறு ஊரில் உள்ள பாடசாலைக்குச் சென்றுவிட்டாள்.

சில வருடங்களில் தான் தொழில் புரிந்த அலுவலகத்துக்கு வேலைக்கு வந்த கமலாவை விரும்பி மணமுடித்தார் சந்திரன். அவரது இல்லற வாழ்க்கை இனிமையாகக் கழிந்தது.

இப்போது மைதிலியின் வரவு இன்று அவரது சிந்தனையில் முள்போல குத்திக்கொண்டிருந்தது.

'எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை?' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார்.

மைதிலிதான். அதே கருகருவென்ற கேசம்.. அதே சிரிப்பு.. அதே கன்னக் குழி..

'சந்திரன்.. என்ன சாப்பிடுகின்றீர்கள்? அப்படியே கமல்ஹாசன் மாதிரியே இருக்கீங்களே. ஆச்சரியமாக இருக்கின்றது' என்றாள்.

இருவரும் பேசியபடியே கார் இருக்கும் இடத்தை அண்மித்து விட்டார்கள்.

சந்திரன் மைதிலியிடம், 'உங்களை உங்கள் வீட்டில் கொண்டுபோய் விடவா?' என்று கேட்க மைதிலியும் 'சரி' என்றாள்.

தன் மனதை அரித்துக் கொண்டிருந்த விடயத்தைப் பக்குவமாகக் கேட்டார் சந்திரன்.

'மைதிலி நான் உரிமையோடு கேட்கின்றேன். நீ ஏன் இன்னும் திருமணம் செய்யவில்லை?'

'எனக்குப் பிடித்தவரை நான் சந்திக்கவில்லை. நான் சந்தித்த ஆண்கள் எல்லோருமே பணத்தாசை பிடித்த பிசாசுகள். திருமணத்துக்குப் பிறகும் வேலைக்குப் போக வேண்டும் என்று கண்டிஷன் போடுகின்றனர். அதுவுமில்லாமல் திருமணமான பின்னர் எனது குடும்பத்தாருக்கு உதவி செய்யவும் கூடாதாம். எனது தந்தை இறந்துவிட்டார் சந்திரன். அம்மா என்னோடுதான் இருக்கிறா. என் இரண்டு தங்கைகளையும் திருமணம் முடித்துக் கொடுத்துவிட்டேன். அவர்களும் என் பணத்தில்தான் குறியாக இருக்கின்றார்கள். சுயநலமிக்க உலகம் இது. உன்னைப் போல் ஒருத்தர் கிடைத்திருந்தால் நான் எவ்வளவு சந்தோஷமா இருந்திருப்பேன். நிச்சயம் உனது மனைவி கொடுத்து வைத்தவள். சாமியாராக இருந்தவன் இப்போ குடும்பஸ்தன்' எனச் சொல்லிவிட்டு கலகலவெனச் சிரித்தாள் மைதிலி.

கிணறு வெட்டப் போய் தேவதை கிளம்பியதாக இருந்தது சந்திரனுக்கு. கார் வெள்ளவத்தையை அடைந்தது.

'மைதிலி உண்மை நட்பிற்கு மதிப்புக் கொடுத்து என்னை வெறுத்துவிடுவாயோ என்று பயந்துதான் என் காதலை உனக்குச் சொல்லவில்லை' என சந்திரன் கூறினார்.

மைதிலி மௌனமானாள். சந்திரனும் எதுவும் பேசவில்லை. தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் சந்திரனைத் திரும்பிப் பார்த்தாள் மைதிலி.

'நீ ஆம்பிளை. தைரியமாகச் சொல்லியிருக்கலாம். நீ கேட்டிருந்தால் நான் மாட்டேன் என்றா சொல்லியிருப்பேன்?' என்றுவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

இருவர் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

மைதிலி விம்மலுடன் காரைவிட்டு இறங்கினாள்.

கார் கதவு அடைக்கப்பட்டது.

கார் கதவு மட்டுமல்ல.. சந்திரனின் மனக் கதவும்தான்!!!

# பரிதாப நிலை

பண்டிதனே
உன்னைவிட
பல்லாயிரம் மடங்குகள்
மேலான பண்பில் பாமரன்..
ஆகக் கீழான தளத்தில் நீ!

வெட்கப்பட வேண்டிய நிலையில்
கற்றறிந்த நம் சமூகம்!

எங்கு தேடினாலும்
இணங்கவொண்ணா
ஒழுக்கங்கள்!

ஆராய்ந்து பார்த்தாலும்
அறிய முடியாத
துர்க்குணங்கள்!

எங்கெங்கிலும்
மலிந்து கிடக்கின்ற
சுயநலங்கள்!

சுகப்படுத்த
முடியாத பிணியில்
துர்க்குணங்கள்!

யாரை...
எப்படியெல்லாம்
ஏமாற்றுவதென்று
அலைந்து திரிகின்ற
அழுகிப்போன
உள்ளங்கள்!

உள்ளமெல்லாம்
தில்லுமுல்லில்
சிதறிக் கிடக்கின்ற
மனித வாழ்வுகள்!

நம்பிக்கைகளை
நாசமாக்குகின்ற
ஆயிரமாயிரம்
மோசடிப் பேர்வழிகள்!

எங்கு தேடினாலும்
கண்டெடுக்க முடியாத
நீதிகள்...
நியாயங்கள்...
நேர்மைகள்...

ஜீரணிப்புகளுக்கு
அப்பாலாகிப்போன
கசக்கின்ற உண்மைகள்!

கற்ற கல்வியாலும்
அறிந்த அறிவாலும்
அமைக்க இயலாத
தூய வாழ்க்கையின்
சொந்தக்காரனாக
பரிதாப நிலையில்
பண்டிதன்
வாழ்க்கை!!!

● ஏ.சீ. ஜரீனா முஸ்தபா

# இலக்கிய அனுபவ அலசல் 18

கவிஞர். ஏ. இக்பால்

1954களில் பாடசாலை சஞ்சிகை 'கலாவல்லி'யின் ஆசிரியரான போதிலிருந்து எனது இலக்கிய முயற்சி எத்தனங்கள் ஆரம்பமாகின்றன. பத்திரிகைகளிலே எழுதி வந்ததால், வானொலியிலும் எழுதிப்பேச வேண்டும் எனும் ஆசை துளிர்த்தது. அதனால் 1959.03.30 இல் பதுளையிலிருந்து 'சீறாவிலிருந்து' எனும் 15 நிமிடப் பேச்சொன்றை வானொலிக்கனுப்பினேன். அதிலிருந்து வானொலித் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பினால் ஏற்பட்ட முன்னேற்றம், சிக்கல், சண்டை சச்சரவுகள் சுவாரஷ்யமானவை. அவற்றைத் தனியாக விவரிப்பேன்.

முஸ்லிம் நிகழ்ச்சியில் பங்குபற்றிக் கொண்டிருந்த என்னைத் தமிழ் நிகழ்ச்சியிலும் பங்குபற்ற அழைத்தனர். இ. இரத்தினம், ஸி. ஹரிஹரசர்மா ஆகியோரின் அழைப்பில் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றினேன். அவற்றின் விரிவை வேறோர் அலசலில் விபரிப்பேன்.

விசேடமாக பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் வானொலி தமிழ் நிகழ்ச்சியில் 'எழுத்துலகம்' எனும் நிகழ்ச்சியொன்றை நடத்தியபோது என்னை ஒரு பேட்டிகான அழைப்பு விடுத்தார்.

1973.01.27 இல் அழைப்பு விடுத்த கடிதம் கீழே தரப்பட்டுள்ளது. இக்கடிதப்படி கேள்விகள் ஐந்து. பதிலும் ஐந்து பந்திகளிலுமுண்டு.

*K. KAILASAPATHY*
*M.A. (Cey.) Ph.D (Birm.)*

*29, 42nd Lane,*
*Colombo 06.*
*27.01.1973*

*அன்புள்ள இக்பால் அறிவது,*

*வானொலியில் 'எழுத்துலகம்' எனும் நிகழ்ச்சியை நான் நடாத்தி வருகிறேன்.*

*பெப்ரவரி 10 ஆம் திகதி ஒலிப்பதிவாகி, 13 இல் ஒலிபரப்பப்பட இருக்கும் நிகழ்ச்சியில் சித்திலெப்பை பற்றிய ஒரு அலகைச் சேர்க்க விரும்புகிறேன். அப்பொருள் குறித்து உம்முடன் நான் உரையாடுவதாக அமையும். பின்வரும் வினாக்களுக்கு விடை தயாரிக்கவும்.*

*01. மறுமலர்ச்சியாளர் சித்தி லெப்பை என்று முதன்முதல் வரலாற்று ரீதியாக எடுத்து உரைத்தோர் யார்? (A.M.A. AZEEZ போன்றோர்)*

*02. எவ்வளவு காலமாக சித்தி லெப்பை பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வந்துள்ளன?*

*03. தேசியப் பிரமுகராகப் பரிணமித்த ஆராய்ச்சிப் போக்கு?*

*04. சித்தி லெப்பை தமிழ் எழுத்துக்குச் செய்த மிக முக்கியமான தொண்டு (பத்திரிகைகள், நாவல்கள் முதலானவை)*

*05. சித்தி லெப்பையின் உரைநடை*

*இவை போன்றவற்றைப் பற்றி சுமார் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் உரையாடல் வேண்டும். எதற்கும் முடிந்தால் உடன் பதில் எழுதவும்.*

*க. கைலாசபதி*

**ஐந்து கேள்விகளுக்கான ஐந்து விடைகள் பின்வருமாறு:-**

**01.** 1948 ஆம் ஆண்டுக்கு முன் அறிஞர் சித்தி லெவ்வை அவர்களைக் கல்வி, அரசியல், இலக்கிய வரலாற்றுடன் ஆய்வு செய்ய எவரும் துணியவில்லை. துணியாமைக்குக் காரணம்: அவரது பாரிய சேவைத் திறமையின் பிரதிபலிப்புக்கள் எழுத்துடனும், காலமாற்றத்துடனும் தூர்ந்த நிலைக்காகிவிட்டன எனலாம். அதற்குச் சித்தி லெவ்வை அவர்களும் ஒரு காரணம்தான். அவரது எச்செயல்களும் இயக்க ரீதியில் வளரவில்லை. இயக்க ரீதியில் வளர்ந்திருந்தால், சமுதாயம் இவ்வளவு குறுகிய காலத்துள் அவரை மறந்திருக்காது. ஜனாப். ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் ஸாஹிறாக் கல்லூரியின் அதிபரானமையால், அக்கல்லூரியுடன் தொடர்பான சித்தி லெவ்வை அவர்களின் கல்வித் தொண்டினையே ஆராய முற்பட்டார். அதுமட்டுமல்ல ஸாஹிறாவின் சஞ்சிகையில் எழுதவும் தொடங்கினார். இக்காலத்தே சித்தி லெவ்வை அவர்கள் பற்றி மேலோட்டமாகச் சமுதாயத்தின் மேற்தட்டினர் அறிய வாய்ப்பேற்பட்டது எனலாம். இதுவும் 1948 ஆம் ஆண்டிற்குப் பின்தான் நடைபெற்றது. ஆனால் "இஸ்லாமும் தமிழும்" பற்றிய ஆய்வில் இதற்கு முன்பே இவரது ஆக்கங்கள் பற்றிய கணக்கெடுப்புக்கள் தென்னிந்தியாவில் தொடர்ந்திருக்கின்றன. அதுவும் பரவலும், பலமும் பெறவில்லை.

**02.** தேசியப் பிரமுகராக அவர் ஆராயப்பட்டதே 1954 க்குப் பின்புதான் என நினைக்கின்றேன். அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றந்தான் இதற்கு வழிவகுத்தது. ஜனாப். எம். முஹம்மது ஸமீம் அவர்கள் சித்தி லெவ்வை பற்றிக் தேசியக் கண்ணோட்டத்தில் எழுதினார்.

1962 ஆம் ஆண்டில் அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கூட்டிய தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் சித்தி லெவ்வை அவர்களை தேசிய ரீதியில் கனம் பண்ணினார்கள். 1963.08.11 இல் மட்டக்களப்பு தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தமது 09 ஆவது ஆண்டு விழாவில் அறிஞர் சித்தி லெவ்வைக்கு அரங்கமைத்து விழா எடுத்தது. இந்த நடவடிக்கைக்குப் பின்புதான் தேசிய ரீதியில் இவர் இன்னும் அலசப்பட்டார். அந்த வழிக்கும் ஜனாப். ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் முக்கிய கால் என்றே கூறலாம். இந்த முறையிலான ஆய்வுக்களைக்கூட அவ்வப்போது அவர் ஈழத்துப் பத்திரிகைகளில் செய்து வந்தார்.

**03.** அறிஞர் சித்தி லெவ்வை அவர்கள் தமிழ் எழுத்துக்கு அதிக தொண்டாற்றியுள்ளார். இது அவரது செய்கைகளுக்கும் அதிக பலத்தையே கொடுத்திருக்கிறது. "அஸன்பேயின் கதை" என்னும் நாவலை அவர் எழுதியதிலிருந்து, ஒரு தனி வைதீகப் போக்கில் நின்றும் உயர்ந்து, புதுமைகளைச் சமுதாயம் அறிந்தே ஆகவேண்டும் என்னும் சிந்தனைக்குள்ளாகின்றார். இப்போக்கு ஆறுமுக நாவலரிலும் காணப்பட்டே இருந்திருக்கின்றது. இந்நாவல் ஈழத்து முதற் தமிழ் நாவல் என்பதை ஜனாப் எஸ்.எம். கமாலுத்தீன் அவர்கள் நிலைப்படுத்துகின்றார். கதை படிக்கும் ஆர்வத்தினாற்தான் வாசிப்பினை உண்டாக்கலாம் என்பதாலோ, கதைகளே படிக்கக்கூடாது என்றிருக்கும் முஸ்லிம் வைதீகப் போக்குள்ளவர்கள் கூட இந்நாவலைப் படித்துள்ளமையால் தாம் முன்னின்று பழமையின் மூடமைகளை மட்டும் ஒதுக்கிவிட வேண்டும் என்பதனாலோ இத்துறையில் இவர் கைவைத்திருக்க வேண்டும் என எண்ண முடிகின்றது. "அஸ்றாறுல் ஆலம்" என்னும் ஞான நூல், "ஸுறத்துல் ஸலாத்து" என்னும் ஞானத் தொகுப்பு நூல், "அபுனுவாஸின் கதை" என்னும் அங்கச்சுவை நூல், "இலங்கைச் சோனகச் சரித்திரம்", "துருக்கி கிரேக்கர் யுத்த சரித்திரம்" என்னும் சரித்திர நூற்கள், பாடப் புத்தகங்கள் யாவையும் எழுத்துக்கூட்டி வாசிக்கத் தெரிந்த, வாசிப்பில் மிகவும் இடர்படக்கூடியவர்கள்கூட வாசித்திருக்கின்றார்கள் என்பதை வயது முதிர்ந்தவர்களிடம் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

இவரது நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி உத்திமுறைகளைக் கையாண்டே எழுதப்பட்டுள்ளமையால் இவர் அன்றைய உலக இலக்கியப் பாதிப்பில் ஊறியிருக்க வேண்டும் என்பதற்கையமில்லை. பாமர மக்களினின்றும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த ஞான விஷயங்களை ஜனரஞ்சகமாக்க எண்ணி இவர் வெளியிட்டதால் "ஆத்ம இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தியவர்" எனும் கண்டனங்களுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கதே. அக்காலத்தில் கண்டனங்கள் வெளியாவது சர்வ சாதாரணமானதே. சித்தி லெவ்வை அவர்களும் தர்க்க ரீதியிலான கண்டனங்களையும் வெளியிட்டுள்ளார். ஆறுமுகநாவலர்கூட அதிக கண்டனங்களை வெளியிட்டவர்தான். சித்தி லெவ்வை அவர்களின் கண்டனப் பிரசுரங்கள் சில ஜனாப் எஸ்.எம். ஜமால்தீன் அவர்களிடம் உள்ளன.

இவரது இலக்கிய ஆக்கங்கள் சமுதாய ரீதியில் அதிக வாசகர்களையும், ஓர் இலட்சியப்பான்மையுள்ள கூட்டத்தையும் அக்காலத்தில் வளர்த்திருக்கின்றன.

04. அரசியல், இலக்கியம், உலகப் போக்குகள் என்பனவற்றைச் சமுதாயம் அறிய வேண்டும் என்பதாலும், உலக அறிவியற்றுறை சார்ந்தவராக சித்தி லெவ்வை அவர்கள் இருந்தமையாலும் ஒரு பத்திரிகை அவசியம் என்பதால் "முஸ்லிம் நேசனை"த் தொடங்கினார்கள். முஸ்லிம்களைப் பொறுத்தளவில் பத்திரிகைத் துறை, பத்திரிகைப் படிப்பு என்பதே அக்காலம் சூன்ய நிலைதான். இந்த நிலையை ஓரளவு அகற்றி ஒரு பாரம்பரிய நிலைமையை ஆக்கியும் விட்டார். இப்பத்திரிகை என்னும் ஆயுதத்தால் அனேக தேவைகளைச் சமுதாயத்திற்குப் பெற்றும் கொடுத்தார். அந்திம காலத்தில் "ஞானதீபம்" என்னும் ஞானப் பத்திரிகையை ஆத்ம திருப்திக்காகவே நடாத்தியிருக்கிறார். இதனால் மிகுந்த பொருட் செலவையும், எதிர்ப்பையும் பெற்றிருக்கின்றார். இப்பத்திரிகை உத்திமுறையும் புதுமையானதொன்றுதான். பல சமய உயர் போதகர்களின் கலந்துரையாடல், அதற்கு இவர் கூறும் தீர்ப்புக்கள் அடங்கிய முறையில், அவ்வப்போது நடக்கும் விஷயங்களையும் நுழைத்து மாதாமாதம் "ஞானதீபம்" வெளிவந்தது. பத்திரிகைத் துறைப் பாதிப்பால் உந்தப்பட்ட ஒரு பரம்பரையும் வளர்ந்தமைக்கும் சித்தி லெவ்வை காரணமாகிறார். 1893 இல் எல்.எம். உத்மான் என்பவர் "இஸ்லாமிய மித்திரன்" என்னும் பத்திரிகையையும், 1901 தொடக்கம் 1945 வரை ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் என்பவர் "முஸ்லிம் பாதுகாவலன்" என்னும் பத்திரிகையையும் வெளியிட்டனர். முற்றிலும் இப்பயிற்சிக்கு வித்திட்டவர் அறிஞர் சித்தி லெவ்வை அவர்கள்தான். அப்துல் அஸீஸ்கூட முஸ்லிம் நேசனில் வேலை செய்துமிருக்கின்றார். இப்படி இது காலவரை முஸ்லிம்கள் பத்திரிகைத் துறைக்கு முன்னோடியாகச் சித்தி லெவ்வை அவர்களையே கொள்கின்றனர். இவ்விஷயம் பத்திரிகை தொடங்குபவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம்.

05. அறிஞர் சித்தி லெவ்வை அவர்களின் உரைநடை, அறபுத்தமிழ் கலந்த மணிப்பிரவாள நடையாகும். இந்நடை முஸ்லிம் சமூகத்தைக் கவர்ந்த நடை என்றே கூறலாம். தம் கருத்தை இறுக்கமாகவும், சமுதாயம் விளங்கிக்கொள்ளவும், பரவலாக வலியுறுத்தவும் அவருக்கு அந்நடை மிகவும் உதவியளித்திருக்கின்றது. சித்தி லெவ்வை அவர்களின் காலத்தில் இளைஞராக இருந்த அப்துல் அஸீஸ் அவர்கள் 1901 இல் தொடங்கிய "முஸ்லிம் பாதுகாவலன்" பத்திரிகையின் நடையையும், சித்தி லெவ்வை அவர்களின் நடையையும் ஒத்து நோக்கும்போது, சித்தி லெவ்வை அவர்களின் நடையை அக்காலத்தவர்கள் மிகவும் விரும்பினார்கள் என்பது தெரிகின்றது.

உதாரணம்: "றஸுல்மார்களும், நபிமார்களும் பிறப்பிலே அவர்கள் கல்புகள் பரிசுத்தமாயிருப்பதால் மறைவான ஆலங்களும் அஸ்றாறுகளும் அவர்களுக்குத் தெரியும். இரண்டாவது சிலர் பிறப்பிலே இந்திரியங்களின்

தத்துவங்கள் குறைந்தவர்களாகவும், சூக்கும சரீரத்தின் பார்வைக் கூர்மையுள்ளவர்களாகவும் இருப்பவர்களுமிருக்கிறார்கள். இவர்களுக்குக் குறித்த ஆலத்திலுள்ள சில மறைவான காரியங்கள் வெளியாகிறதும் உண்டு.''

**- அஸ்றாறுல் ஆலம்**

''மரணத்தின் பின் மனிதனுக்குண்டாகும் நிலைபரத்தைப்பற்றி பரிசுத்த குர்ஆனின் போதனை எவ்வாறிருக்கிறதென்ற கேள்வி தற்போது கவனிக்கத் தக்கவொன்றாயிருக்கின்றது. சுருக்கமாக சொல்லவெனில் மரணத்தின் பின் வரும் நிலை புதிதன்று. அது இந்தச் சீவியத்திலுள்ள எங்கள் ஆத்மாவுக்கடுத்த நிலைபரத்தின் பூரணமான தெளிவான பிரதி ரூபமே.

**- முஸ்லிம் பாதுகாவலன் 1907 ஜனவரி இதழ்**

இப்படி நோக்கும் போது சித்தி லெவ்வை அவர்களின் வசன நடைப் போக்கைப் பின்பற்றியும், பத்திரிகைப் போக்கைப் பின்பற்றியுமே இன்றைய நடை திரிந்ததெனலாம்.

என்னைப் பொறுத்தளவில் 1961 ஆம் ஆண்டிலிருந்தே அறிஞர் சித்தி லெவ்வை அவர்களுக்கு ஒரு பைல் (கோவை) ஐத் தொடங்கிவிட்டேன். ஏதோ முடிந்தளவு மிகப் பொறுப்புடன் அவரது வரலாற்றைத் தேடி ''மறுமலர்ச்சித் தந்தை'' என்னும் நூலை ஆக்கிவிட்டேன். ''மறுமலர்ச்சித் தந்தை'' என்னும் பிரயோகம் என்னுடையதுதான். ஜனாப் ஏ.எம்.ஏ. அஸீஸ்கூட, ''கவர்ச்சியான தலைப்பு இது'' என்றார். ஒரு திருப்தியான விஷயம் 1972 ஆம் ஆண்டு சித்தி லெவ்வை ஆண்டென்றே கொள்ள இடமளிப்பதற்கு எனது ''மறுமலர்ச்சித் தந்தை''தான் காரணம். அவருக்கு முத்திரை வெளியிடுவது பற்றிய கருத்துக்கள், அவரது பிறந்த மண்ணிலுள்ள பாடசாலையின் பெயர் மாற்றம், சர்வதேச இஸ்லாமிய நிலையம் 1972 இல் சித்தி லெவ்வை நினைவு தினம் கொண்டாடியமை, எனது புத்தகத்திற்குச் கலாசாரப் பேரவையின் பரிசு கிடைத்தமை, அவரது நூற்களை சிரத்தையுடன் ஆராய முன்வந்தமை என்பன 1972 இல் முழுமையாக எழுந்தமைக்கு, 1971 இல் வெளியான எனது புத்தகம் காரணம் என்பதால் திருப்தியடைகின்றேன்.

அதுமட்டுல்ல இப்புத்தகத்தை மிக விரைவில் வெளியாக்க வேண்டும் என நச்சரித்த விண்மதி வெளியீட்டாளர் நண்பர் திரு. இர. சந்திரசேகரனுக்கு உண்மையில் நான் எப்போதும் நன்றி செலுத்தத்தான் வேண்டும். ஆனால் இன்றும் சித்தி லெவ்வை அவர்கள் பற்றிய முழுப்பூரண ஆய்வு நூல் ஒன்று இன்னும் உருப்பெறவில்லை என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்!!!

(இன்னும் தொடரும்)

# பொறுமை கொள் பெருமை கொல்

● எம்.எஸ்.எம். சப்ரி - பூவெலிகட

மடமைகள் போக்க வந்த
மாநபிக்கு
இறைவன் கற்றுக்கொடுத்தான்
பொறுமைதனை..
இன்னல்கள் பல வந்தபோதும்
நபிகளார்
கடைப்பிடித்தார் இதை!

மேன்மை மிகு இறைவனிடம்
இல்லாதிருந்தால் பொறுமை
மனிதன் புரியும்
அட்டூழியங்களுக்காய்
உடனே அழித்திருப்பான்
இத்தரணியை!

பெருமை என்பது
ஒருவன் தன்னையே
அழித்துக்கொள்ளும்
விஷ மருந்து..
தெரிந்துகொண்டும் வாழலாகுமா
இதை மறந்து?

அல்லல் அணுகும் போதெல்லாம்
பொறுமை இழப்பவன்
என்ன சாதிக்கப் போகின்றான்???


## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்!

ஆசிரியர்

# மறக்க முடியாதவர்கள்

## குறுங்கதை

● எம்.எம். அலி அக்பர்
- கிண்ணியா

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பாஹிம், மனைவி ராஷிதா கொடுத்த திருமண அழைப்பிதழைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தான். அவனோடு வேலை செய்த நண்பன் நாஸிருக்கு நாவலப்பிட்டியில் திருமணமாம்.

அதுதான் நாஸிருடைய சொந்த இடம். ஆறு மாதங்கள்தான் பாஹிமுடன் பிரதேச சபையில் வேலை செய்தான். அக்காலப் பகுதிக்குள் இருவரும் மிக நெருங்கிப் பழகியிருந்தார்கள்.

பாஹிமும் ராஷிதாவும் திருமணம் முடித்து ஒன்றரை வருடங்கள் கடந்து விட்டன. இன்னும் குழந்தை பிறந்திருக்கவில்லை. இருவரும் ஜோடியாக இத்திருமண வைபவத்துக்குச் சென்றனர்.

திருமணம் இனிதே நிறைவேறியது. திரும்பும் வழியில் பாஹிம் மனைவியிடம் மாத்தளையில் இருக்கும் பஸீராவின் வீட்டுக்குச் சென்றுவிட்டு ஊருக்குத் திரும்புவோம் என்றான்.

'அப்படி என்னங்க அங்க விசேஷம்?'

'விசேஷமில்ல. நான் மாத்தளையில் படிக்கும்போது என்னோடு படித்த பஸீராவின் வீடு அங்கேதான் இருக்கின்றது. அவளது குடும்பத்தாரும் என்னோடு நன்றாகப் பழகியவர்கள். அவளும் திருமணமுடித்து சந்தோஷமாக வாழ்கின்றாள். போற வழி தானே ராஷிதா. போய் பார்த்திட்டு வருவோம்'

'எதுக்கு அவளைப் பாக்கணும்?' என்றாள் ராஷிதா சற்று எரிச்சலோடு.

'நான் எப்ப மாத்தளைக்கு வந்தாலும் அவள பாக்காம ஊருக்குப் போகமாட்டேன். உங்க ரெண்டு பேரையும் இன்னக்கி அறிமுகம் செஞ்சி வச்ச மாதிரியும் இருக்கும்'

'ஒவ்வொரு தடவையும் இவளப் பாக்கிற அவசியம் என்னங்க இருக்கு?'

'அவ நல்லா பழகுற டைப். அப்படி கலகலப்பாகப் பழகுறவங்கள லேசா மறந்திட முடியுமா ராஷிதா?'

'அவ்வளவு நல்லா பழக்கமா?' என அழுத்திக் கேட்டாள் ராஷிதா. சற்று நேரத்தில் மனம் ஒரு நிலையிலில்லாமல் மாத்தளையில் இருவரும் இறங்கினார்கள்.

முச்சக்கர வண்டியில் சென்று பஸீராவின் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான் பாஹிம். கதவைத் திறந்த ரமீஸ் ராஷிதாவைக் கண்டதும்,

'அடடா ராஷிதா! ஆச்சரியமா இருக்கே. நீங்க வருவீங்க என்று எதிர்பார்க்கவே இல்ல' என்றார்.

'அப்போ ராஷிதாவை இதுக்கு முதல் தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்டான் பாஹிம்.

'நாங்கள் இருவரும் பேராதனை பல்கலைக்கழகத்தில் தானே படிச்சு பட்டதாரியானோம். ராஷிதா நல்லா கலகலப்பாக பழகுற டைப். அப்படிப்பட்டவங்களை எப்படித்தான் மறக்கமுடியும்? என்றார் ரமீஸ்.

அப்போது அங்கே வந்த பஸீரா 'வாங்க வாங்க. என்ன பாஹிம் திடீரென்டு.. இவ தான் உங்கவைப்பா? உக்காருங்க.. உக்காருங்க..' என்றாள்.

'இவர உங்களுக்கு முன்னரே தெரியுமா?' என்று பஸீராவிடம் கேட்டார் ரமீஸ்.

'தெரியுமாவா? நானும் பாஹிமும் ஒன்டாதான். படிச்சம். கலகலப்பாகப் பழகுவாரு.. நம்ம இரண்டு சோடிகளும் ஒருவருக்கொருவர் மறக்க முடியாதவர்களாக ஆகிவிட்டோமே' என்றாள் பஸீரா.

பாஹிம் தன் மனைவி ராஷிதாவின் முகத்தை நோக்கினான். இப்போது அவள் முகத்தில் சாந்தியும் அமைதியும் நிலவியிருந்தது!!!

**"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்**

பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

# மௌனத்தின் சத்தம்

துயிலும் விழிகளுக்குள்
ஊறும் கண்ணீர்த் துளிகள்
எழ முடியாமலும்
அழ முடியாமலும் ஒரு
அபலையின் கண்கள்
மௌனமாய் சப்தமிடுகிறது!

இருட்டை நேசித்தவர்கள்
தனியிடங்களை மட்டும்
சுவாசித்தவர்கள்
மோப்பம் பிடித்த நாயாய்
அலைந்து திரிந்த
காமப் பிசாசுகள்
சுகத்திற்காய் பதறிய
அவர்களின்
வெட்கத் தலங்கள்
மௌனமாய் சப்தமிட்டு
அடங்கிப் போகிறது!

காதல் போர்வை விரித்து
கூடிக் குலாவி கதை பேசி
ஊர் உறங்கும் வேளையிலும்
விழித்திருந்து - தன்
ஊரை விட்டோடிய
காதல் ஜோடிகளின்
பதிவுத் திருமண நாடகம்
விவாகரத்தின்
விழிம்பிலிருந்து
சப்தமிட்டு மௌனிக்கிறது!

விதிகளுக்குள் தன்னை
விலங்கிட்ட முதிர்க்கன்னி
வரதட்சணையில்
வகிடு பிரிந்த
வாழ்க்கையை
நினைத்து நினைத்தே
மௌனமாய் சப்தமிடுகிறாள்!

சப்தமான முனகலுக்கே
திசைமாறி நடக்கும்
சுயநல பாதமுள்ளவரிடம்
காமமும், காதலும்,
கல்யாணமும்
வெறும் செய்திகளாய் மட்டும்
மௌனமாய் வரும் சப்தங்கள்
யாருக்குக் கேட்கும்???

● புத்தளம் நுஸ்ரி ரஹ்மதுல்லாஹ்

# மறைந்தும் மறையாத மாமேதை அப்துல் கலாம்

● நுணாவிலூர் கா.விசயரத்தினம் (இலண்டன்)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

திருக்குறளுக்கு அமைய அப்துல் கலாம் கசடறக் கற்றார். கற்றபின் அவை கூறிய ஒழுக்க நெறியில் வழுவாது ஒழுகி நின்றார். அதுவும் காணாதென்று மேலும் தொடர்ந்து, அதன்படி செயற்பட்டு உலக மேதையானார். அவர் வரலாற்றைச் சற்று விரிவுபடுத்திக் காண்போம்.

ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் ஜைனுலாப்தீனுக்கும் ஆஷியம்மாவுக்கும், நான்கு சகோதரர்களுடனும், ஒரு சகோதரியுடனும் ஆறாவது குழந்தையாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் 1931.10.15 அன்று பிறந்தார். இவர் இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு படகோட்டியின் மகனாவார். இவர் குடும்பம் ஏழ்மையில் வாடியதால், இவர் செய்தித்தாள்களை விநியோகம் செய்தார். இவர் ஒரு பழுத்த பிரமச்சாரியாவார்.

இவர் தன் பள்ளிப் படிப்பை முடித்தபின், திருச்சினாப்பள்ளியிலுள்ள 'செயின்ட் ஜோசேப் கல்லூரியில்' இயற்பியல் பயின்று 1954 ஆம் ஆண்டு இயற்பியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியற் துறையில் ஆர்வம் காட்டாத இவர், 1955 ஆம் ஆண்டு தன்னுடைய 'விண்வெளிப் பொறியியற் படிப்பை' சென்னையிலுள்ள எம்.ஐ.டி. யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**விஞ்ஞானியாக அப்துல் கலாம்.**

1960 ஆம் ஆண்டில் 'பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்' (Defence Research and Development Organization = DRDO) எனும் பிரிவில் விஞ்ஞானியாக ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கி, ஒரு சிறிய ஹெலிகாப்டரை வடிவமைத்து இந்திய ராணுவத்துக்கு வழங்கினார். பின்னர், 'இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்' (Indian Space Research Organization = ISRO) எனும் பிரிவிலும் தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து, 'துணைக்கோள் ஏவுகணைக் குழுவில்' (Satalite Launch Vehicle = SLV)

செயற்கைக்கோள் ஏவுதலிலும் முக்கிய பங்காற்றினார். இவர் 1980 ஆம் ஆண்டு SLV-111 ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி - 01 என்ற துணைக்கோளை விண்ணில் ஏவச்செய்து வெற்றியும் கண்டார். இது இந்தியாவுக்கே ஒரு பெரும் சாதனையாக அமைந்தது. இச் செயலைப் பாராட்டி இந்திய மத்திய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான 'பத்மபூஷன்' என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.

1963 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டுவரை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பற்பல பணிகளைச் சிறப்பாகக் கடமையாற்றிய இவர் 1999 ஆம் ஆண்டு 'பொக்ரான் அணு ஆயுத சோதனையில்' முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய அப்துல் கலாம் இதுவரை ஐந்து ஏவுகணைத் திட்டங்களில் பணியாற்றியுள்ளார். அவர், 'இந்திய இராணுவ ராக்கட் படைப்பின் பிதாவாக' அனைவராலும் போற்றப்படுகின்றார்.

## குடியரசுத் தலைவராக அப்துல் கலாம்.

2002 ஆம் ஆண்டில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவராக 2002.07.25 இல் பதவியேற்றார். இவர் குடியரசுத் தலைவர் பதவியை ஏற்கமுன் இவருக்கு இந்தியாவின் மிகப் பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதை மத்திய அரசு இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. இன்னும், 'பாரத ரத்னா' விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார். இவர் 2007.07.25 வரை குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார். இவரை 'மக்களின் ஜனாதிபதி' என்று அனைவரும் அன்பாக அழைத்தனர்.

குடியரசுத் தலைவராக ஐந்து (05) ஆண்டுகளை நிறைவு செய்தபின் அப்துல் கலாம் அவர்கள் பின்வரும் சிறப்பு வாய்ந்த பொறுப்புகளை ஏற்று மதிப்புடன் செயலாற்றி இந்திய மைந்தரானார்.

1. சில்லோங் மேலாண்மை இந்திய நிறுவனத்தின் வருகைதரும் பேராசிரியர்
2. அகமெடபாட் மேலாண்மை இந்திய நிறுவனத்தின் வருகைதரும் பேராசிரியர்
3. இந்டோரி செயலாட்சி இந்திய நிறுவனத்தின் வருகைதரும் பேராசிரியர்
4. பெங்கலூர் அறிவியல் இந்திய நிறுவனத்தின மதிப்பு மிக்க பல்கலைக்கழக ஆட்சி உறுப்பினர்
5. திருவனந்தபுரம் விண்வெளி அறிவியல் இந்திய நிறுவனம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றின் உயர்முறை மன்ற முதல்வர்
6. அண்ணா பல்கலைக்கழக வான்வெளிப் பொறியமைப்புப் பேராசிரியர்
7. இந்தியாவிலுள்ள வேறுபல கல்லூரிகள், ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியாளர்

8. கைதரபாட்டில் அமைந்துள்ள பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், பெனாறஸ் இந்து பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தகவல் தொழில் நுட்பம் என்ற பாடத்தைக் கற்பித்து வந்தார்.

**மரணம்**

அப்துல் கலாம் அவர்கள் 2015.07.27 அன்று இந்தியாவின் மேகாலயா மாநிலத் தலைநகரான ஷில்லாங்கில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் மாணவர் மத்தியில் மாலை சுமார் 6.30 மணியளவில் உரையாற்றிக் கொண்டிருக்கையில் மயங்கி விழுந்தார். அவர் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றிக் காலமானார். அவரின் இறுதி நிகழ்ச்சிகள் அவர் பிறந்த இராமேஸ்வரத்தில் முழு இராணுவ மரியாதையுடன் 2015.07.30 அன்று மேற்கொள்ளப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில், பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி, முன்னாள் பிரதம மந்திரி மன்மோகன்சிங், உத்தரப்பிரதேச முதல் மந்திரி அக்கிலேஸ் யாதவ் உட்பட்ட பல முக்கிய அரசியற் தலைவர்கள் இத்துன்பியல் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

**விருதுகள்**

அப்துல் கலாம் பெற்ற விருதுகளை நிரல் படுத்திக் காண்போம்.

**ஆண்டு - விருதுகள்.**

1981 - பத்ம பூஷன்
1990 - பத்த விபூஷன்
1997 - பாரத ரத்னா
1997 - தேசிய ஒருங்கிணைப்பு இந்திரா காந்தி விருது
1998 - வீர் சவர்கார் விருது
2000 - ராமானுஜன் விருது
2007 - அறிவியல் கவுரவ டாக்டர் பட்டம்
2007 - கிங்சார்லஸ் - 11 பட்டம்
2008 - பொறியியல் டாக்டர் பட்டம்
2009 - சர்வதேச வோன்கார்மான் விங்ஸ் விருது
2009 - ஹீவர் மெடல் - (ஹவேர்)
2010 - பொறியியல் டாக்டர் பட்டம்
2012 - சட்டங்களின் டாக்டர்
2012 - சவரா சம்ஸ்க்ருதி புரஸ்கார் விருது
2013 - வோன் பிறவுன் விருது
2014 - அறிவியல் டாக்டர்

## அப்துல் கலாம் எழுதிய நூல்கள்

01. அக்கினிச் சிறகுகள்
02. எதிர்கால இந்தியா - 2020
03. எழுச்சித் தீபங்கள்
04. அப்புறம் பிறந்தது ஒரு புதிய குழந்தை
05. A journey through Challenges - 2012
06. Ignited minds- unleashing the power within India 2002
07. Inspiring thoughts - 2007
08. Developments in Fluid Mechanics and Space Technology - 1988
09. You Are Born To Blossom
10. Envisioning an Empowered Nation

## அப்துல் கலாம் மறைவின் பின்னான நிகழ்வுகள்

(1) பிகார் மாநிலம் பாட்னாவில் கிஷான்கஞ்சில் உள்ள வேளான் கல்லூரி மற்றும் அறிவியல் நகரத்துக்கு அப்துல் கலாம் பெயர் சூட்டப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்தது.

(2) அவர் பிறந்த தினமான ஒக்தோபர் 15 ஆம் திகதியை வாசிப்பு நாளாகக் கொண்டாடப்படுமென்று மகாராஷ்ட்ர அரசு அறிவித்தது.

(3) உத்தரப்பிரதேச மாநிலத் தொழில் நுட்பக் கழகத்துக்கு அப்துல் கலாம் பெயர் சூட்டப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்தது.

(4) அவர் பிறந்த நாளைத் தமிழ் நாட்டின் இளைஞர் எழுச்சி நாளாகத் தமிழக அரசு அறிவித்து, அப்துல் கலாம் விருதும் ஆண்டுதோறும் வழங்கப்படும் என்றும் அறிவித்தது.

(5) புதுடில்லியில் அமைந்த அவுரங்சீப் சாலைக்கு 'ஏ.பி.ஜெ. ஆப்துல் கலாம் சாலை' என்று பெயர் சூட்டப்படுமென்று புதுடில்லி மாநகராட்சி ஆணையிட்டது.

(6) ஆந்திரப் பிரதேசச் சட்டப் பேரவை இவருக்குப் புகழாரம் சூட்டி, 21 ஆம் நூற்றாண்டின் சிறந்த மாமனிதர் அப்துல் கலாம் என்றும் புகழ் பாடப்பட்டது.

## கலாம் விட்டுச் சென்ற சொத்துக்கள்

அப்துல் கலாம் அவர்கள் இறந்தபின், அவர் விட்டுச் சென்ற சொத்துக்களின் நீண்ட பட்டியலின் பாங்கினை பார்த்தும், மகிழ்ந்தும், மனம் உருகி வாடி நெகிழ்ந்தும் இராது, அவர் விட்டுச் சென்ற வாழ்வியலைப் போற்றி அதன்படி நாமும் வாழ்ந்து காட்டத் திடசங்கற்பம் பூணுவோம். இதோ அவரின் சொத்துக்களின் பட்டியல்..

01. ஆறு காற்சட்டைகள், நான்கு சேட்டுகள்
02. மூன்று மாலையுடுப்புகள்
(ஒரு மேற்கு நாட்டு உடுப்பு, இரண்டு இந்திய உடுப்புகள்)
03. 2,500 புத்தகங்கள்
04. ஒரு மெத்தை மாடி (அதையும் நன்கொடையளித்துள்ளார்)
05. ஒரு பத்மசிறி பட்டம்
06. ஒரு பத்மபூஷன் பட்டம்
07. ஒரு பாரத் ரத்னா பட்டம்
08. பதினாறு (16) பேரறிஞர் பட்டங்கள்
09. ஓர் இணையத்தளம்
10. ஒரு டுவிட்டர்
11. ஒரு மின்னஞ்சல்

இவரிடம் தொலைக்காட்சி, குளிர்சாதனக் கருவி, மோட்டார் வண்டி, நகை நட்டுகள், முதலீட்டுப் பங்கு, காணி பூமிகள், வங்கிப் பணம் ஆகியவைகள் ஒன்றுமேயிருக்கவில்லை. இவர் தன் இறுதிக்கால எட்டு ஆண்டுகளின் ஓய்வூதியப் பணம் முழுவதையும் தான் பிறந்த கிராமத்தின் அபிவிருத்திக்காக அன்பளிப்புச் செய்திருந்தார். இதனால் இவர் ஒரு தாய் நாட்டுப் பற்றாளனாயும், ஓர் உண்மையான இந்தியனாகவும் அனைவராலும் போற்றப்படுகின்றார்.

**நிறைவாக**

அப்துல் கலாம் அவர்கள் 1960 ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரையான 2015 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து விஞ்ஞானி, தொழில் நுட்ப வல்லுனர், இந்திய ஏவுகணை நாயகன், குடியரசுத் தலைவர், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, பேராசிரியர், அறிவியல் டாக்டர், பொறியியல் டாக்டர், சிறந்த ஆசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், கற்பிப்பவர், சிந்தனையாளர், அவர் எளிய வாழ்க்கைமுறை, அவர் பொன்மொழிகள், கவிதை, மேற்கோள் வாசகங்கள், இனிய பேச்சு ஆகியவை பற்பல துறைகளில் ஐம்பத்தைந்து ஆண்டுகளாகப் பல்வேறு முகங்களுடன் உலாவிய பெருமைக்குரியவராவார்.

அவர் மறைந்தும் மறையா மாமேதையாய், இந்தியச் சரித்திர நாயகனாய், இந்திய நீண்ட வரலாறு படைத்த பண்பாளனாய், தமிழர் மனங்களில் என்றும் பவனி வரும் கதாநாயகனாகியுள்ளார்!!!

ப்ரியமான வாசகர்களே! உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!

# உயிரை நோட்டமிடு

பிச்சைக்காரன் பசியைப் போக்க
பிச்சையெடுக்கிறான்
இச்சைக்காரன் பொருளைச் சேர்க்க
உணர்வைத் திருடுகிறான்!

பஞ்சகாலம் பொருளைப் பதுக்கி
விற்பதும் திருட்டு
கெஞ்சும்போது கொஞ்சமும் வழங்கா
பதுக்குவதும் திருட்டு!

தானிய மூட்டை அரண்மனை போல
வீட்டில் நிறைந்திருக்கும்
மானியமுள்ளோர் தன்மான மூட்டை
காலியாய்க் கிழிந்திருக்கும்!

வைத்த பொருளைக் களவு செய்வோன்
வந்து தேடுகிறான்
நைந்த மனதில் குருடாம் எண்ணம்
நிறைந்து சேர்க்கின்றான்!

எடுக்கும் பொருட்கள் எதுவானாலும்
இழிவான திருட்டே
தடுப்போரின்றித் தானே திருந்தா
தறுதலை மனமிருட்டே!

சுருட்டிய சொத்து மருட்டிய பங்களா
சுகமே வேதனையாய்
மருட்டிவிடுமுன் நெஞ்சக் கூட்டின்
உயிரை நோட்டமிடு!!!

● மருதூர் ஜமால்தீன்

# இவன் நல்ல சேவகன்

சிறுகதை

● சூசை எட்வேட்

நாயொன்று தெருவீதியால் போய்க் கொண்டிருக்கிறது! வித்தியாலயம் வீதியால், காளிகோவில் வழியாக போகிறது. இது என்ன நாயொன்று ஓடிக்கொண்டு போவது பெரிய புதினமா? எத்தனையோ நாய்கள் தெருவெல்லாம் திரிகிறது. கேட்பாரில்லாமல் படுத்துக்கிடக்கிறது. வீதியில் போவோர் வருவோரை எல்லாம் எயமானன் மாதிரி குரைத்து எச்சரிக்கை செய்கிறது. இழுபறிப்பட்டு கடிபடுகிறது. வீதிகளில் நாய்க்கா பஞ்சம்?

அப்படியிருக்க இந்த நாயின் வருகையை ஏன் எல்லோரும் விசித்திரமாகப் பார்க்கிறார்கள்? சிலர் பார்வையில் மரியாதையும் கலந்திருக்கிறது. அந்த நாயின் கோலம் அப்படித்தான் ஒரு விசித்திரத்தை மரியாதையை பார்ப்பவர்பால் ஏற்படுத்திவிடுகிறது. நல்ல வெள்ளை வெளீர் என்ற நிறம் மஞ்சள் புள்ளிகளால் இங்கும் அங்குமாக கோலமிட்டு அழகூட்டுகிறது. சடைத்த மயிர்கள் சுருண்டு மேலும் மெருகூட்டுகிறது. அதன் சடைத்த வால் மேல்நோக்கி உயர்ந்து நுனிவளைந்து கொடிபிடிக்கிறது. மற்ற நாய்களை குட்டி நாய்களாக்கும் உயர்ந்த கொழுத்த உடல்வாகு. எல்லாவற்றுக்கும் மேலாக, அதன் கழுத்தில் பூமாலை ஒன்று தொங்குகிறது. அதன் ஓட்டத்திற்கும் ஆட்டத்திற்கும் ஏற்றவிதமாய் அது அசைந்து நாட்டியமாடுகிறது. இன்னும் அதன் முக்கியமாக முகப்பகுதி மழிக்கப்பட்டு திருநீறு பூசி சந்தனம் குங்குமப்பொட்டு எலுமிச்சை உருண்டை அளவில் அழகாக வைக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கோலம் வேகமாக வரும் கார்களையும் வேகத்தைக் குறைக்கச் செய்கிறது.

காலையில் இந்த நாயைப் பார்ப்பதற்காக வீட்டு வாசலில் காத்திப்போரும் உண்டு. தங்கள் வீட்டு வாயிலில் சற்றுநேரம் நின்று வாலை ஆட்டாதா என்று ஏங்குவோரும் உண்டு. இவ்வளவு மரியாதை இந்த நாய்க்கு இருப்பதற்கு காரணம் அதன் தோற்றம் கோலம் மட்டுமல்ல, இது ஐயர் வீட்டு நாய் என்பதே முக்கிய காரணம்.

சோமஸ்கந்த ஐயர் திருகோணமலையில் பிரபலமானவர், பிராமணர், முன்னர் கோயில் பூசகராய் இருந்தவர் என்பதால் மட்டுமல்ல, அவர் ஒரு சோதிடர் குறிப்பு பார்ப்பதில் வல்லவர் என்பதாலும்தான். காலையில் இருந்து மாலைவரை பலர் அவர் இல்லத்தில் காத்துக்கிடந்து தவமிருப்பர்.

எயமானின் குணம் செல்லப் பிராணிகளிடத்தும் இருக்கும் ன்று சொல்வார். இந்த நாய்க்கும் ஐயர் வீட்டு குணாம்சம் இருக்கும் போலும். இந்த நாயின் கழுத்தில் பூமாலையோடு பன்பையும் தொங்கும். ஏதோ முக்கிய காரியமாகத்தான் அது போய்க்கொண்டிருக்கிறது என்பதை அது பறை சாற்றுவது போலிருக்கும். பெட்டை நாய்க்குப் பின்னால் எத்தனையோ கடுவன் நாய்கள் போய்க்கொண்டிருக்கும். இது, அவற்றை கண்டும் காணாததுபோல கடமையே கண் என்று தன்வழி ஓடிக் கொண்டிருக்கும். குப்பை மேட்டில் இரண்டு நாய்கள் ஒரு எலும்புத்துண்டுக்காக இழுபறிப்படும். கார் பூர் என்று உறுமி பல்லுகள் வெளியே தெரியக் கோரமாக முகத்தை காட்டிகாட்டி கடிபடும். பின்னங்காலை உயர்த்தி மதிலுக்கு மூத்திரம் அடித்துக் கொண்டிருக்கும் வேறொன்று. இப்படியே நாய்கள் தங்கள் கேவலமான குணாம்சங்களை காட்டிக்கொண்டிருக்கும் போதும், இந்த நாய் அந்த கேடுகெட்ட பழக்கங்களை மறந்தோ துறந்தோ, ஒரே திசையைப் பார்த்தவாறு போய்க்கொண்டிருக்கும். எல்லா நாய்களிடத்தும் இதற்கொரு மரியாதை உண்டு. குரைப்பதோ உறுமுவதோ இல்லை. அதன் கோலமோ, ஐயா வீட்டு நாய் என்று தெரிந்ததோ தெரியவில்லை. சில நாய்களுக்கு இதைக் கண்டதும் வால் கவட்டுக்குக் கீழே போய்விடும்.

வினோத கோலம் கொண்ட இந்த நாய் ஓடிக்கொண்டே போய் பிரபலமான காளிகோவிலையும் கடக்கிறது. இடது பக்கமாகத் திரும்புகிறது. பேருந்து நிலையம் நோக்கி போகும் வீதியால் போகிறது. இப்போது ஓடவில்லை. நிதானமாக ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்து பொடி நடையில் போகிறது. ஏனென்றால் அந்த நேரம், ஏன் எந்த நேரமும் வாகனப் போக்குவரத்தும், சன நெரிசலும் கூடிய வீதியாகும் அது.

பொடி நடையில் போன அது, நடையை மேலும் தளர்த்தி மெள்ள நடந்து ஒரு கடையின் முன் போய் நின்றது. 'சிறீ முருகன் பல்பொருள் வாணிபம்', என்ற பெயர்ப்பலகை கடைக்கு மேலே பெரிய எழுத்துகளில் மாட்டப்பட்டிருந்தது.

இந்த நாய் அந்தப் பெயர்ப்பலகையையே பார்த்துக்கொண்டு நின்றது, ஏதோ அதை வாசிக்கத் தெரிந்தது போல. பக்கத்தில் பால முருகனின் படமும் வரையப்பட்டிருந்தது. ஒரு வேளை அதுதான் இதன் குறியீடோ தெரியவில்லை

நாய் தான் வந்திருப்பதை அறிவிக்க முக்கி முனகி குரல் எழுப்பியது. அக்குரலில் பணிவு, குழைவு, மகிழ்ச்சி, வேண்டுதல், செல்லம்... எல்லாம் கலந்திருந்தது.

குரல் கேட்டு கடைப்பையன் உள்ளே இருந்து வெளியே வந்து பார்த்தான். இந்த நாயைக் கண்டதும், அவன் முகத்தில் புன்னகை பிரகாசித்தது. அதன் குரல் மட்டுமல்ல, அதுவரும் நேரமும் அவனுக்குத் தெரியும். அதன்

அருகில் சென்றதும், அது வாலை ஆட்டி முன்னங்காலை உயர்த்தி, முனகி மகிழ்ச்சி தெரிவித்தது. அவனும் அதன் தலையை தடவி சந்தோசத்தை தெரிவித்தான்.

"யூடா, கொஞ்சம் பொறுடா!" என்று அதன் பெயர் சொல்லி செல்லமாக அழைத்தவாறே தலை தடவிக் கொண்டே கழுத்தில் தூங்கிய பையை மாலைக்குச் சேதமில்லாமல் மெல்ல எடுத்தான். அவன் மட்டும்தான் அந்தப் பையை எடுக்க முடியும்! நாயும் அனுமதிக்கும்.

பையைக் கொண்டு அவன் போனபின், யூடா உடம்பை சிலிர்த்துக்கொண்டு உதறியது. மூன்று முறை வாலைக் கவ்வ முயற்சிப்பது போல் வட்டமடித்துவிட்டு அவ்விடத்திலேயே படுத்துக் கொண்டது. அதன் மூஞ்சி கடை வாயிலையே தரிசித்தபடி... காசுப்பட்டறையில் இருந்த முதலாளி, அமளியாக பண பரிவர்த்தனை நடந்தபோதும், இந்த நாயை இடைக்கிடை என்றாலும் பார்த்து இரசித்து முறுவலிக்கத்தவறவில்லை. இது ஒரு மிருகமல்ல மனிதரை விட நல்லது. கடமை கண்ணியமானது. புத்தி யுக்தி உள்ளது என்ற எண்ணத்தின் வெளிப்பாடோ இது.

உள்ளே போன ஊழியன் பையைத்திறந்து பார்த்தான். உள்ளிருந்து ஒரு கொப்பியை எடுத்தான். இன்றைக்கு வேண்ட வேண்டிய பொருட்கள் அதில் பட்டியலிடப்பட்டிருந்தன. முக்கியமாக கற்பூரத்தட்டு, ஊதுபத்தி பெட்டி அரிசி, பருப்பு... என்று இருக்கும். பட்டியலிடப்பட்ட சாமான் சக்கட்டை எல்லாம் பைக்குள் திணித்தான். அவற்றின் விலைகளையும் கூட்டுத்தொகையையும் கொப்பியில் குறித்துக்கொண்டு பையைத் தூக்கிக்கொண்டு முதலாளி முன்வைத்தான். அவர் கொப்பியைப் பார்த்து, பையையும் துழாவி சரிபார்த்தபின், பையன் பையோடு நாயிடம் சென்றான். மாதமுடிவில் சோமாஸ்கந்த ஐயர் காரிலே வருவார். இந்தக் கணக்கை எல்லாம் தீர்த்துவிட்டுப் போவார்.

பையனைக் கண்டதும் யூடா எழுந்து நிற்கும். முனகி மகிழ்ச்சி தெரிவிக்கும். அதன் தலை தடவி தட்டிக் கொடுத்து சாமான் பையை கழுத்தில் மாட்டிவிடுவான். "யூடா, போயிற்றுவாடா" என்பான். யூடாவும் வாலை உயர்த்தி ஆட்டிக் காட்டி "குட்பை" சொல்லும்

வந்தவழியே திரும்பிப் போகாது. நேரேதான் போகும். வேறுவழியால். பேருந்து நிலையத்தை கடந்து போக இருக்கையில் ஒரு உணவகம் (ஹோட்டல்) எதிர்ப்படுகிறது. இது தன் நடையை நிறுத்தி அதன் முன் போய் நின்றுகொள்கிறது. நான் வந்திருக்கிறேன் என்று காட்ட சிறிதாக முனகிக் காட்டுகிறது. கடை ஊழியன் வந்து பார்த்தான். புரிந்து கொண்டான். உள்ளே போய் பழைய தட்டிலே மிச்சம்மீதியாய் கிடந்தவற்றை எல்லாம் நிரப்பிக்கொண்டு, கொண்டுவந்து அதன் முன் வைத்தான்.

வழமையாக அதற்காக ஏற்பாடு செய்திருக்கும் தயாரிப்புத்தான் அது. அவனும் யூடாவை ஒருகணம் நின்று இரசித்துவிட்டுத்தான் சென்றான். அவன் மட்டுமா சனநெரிசலான அவ்வீதியால் அவதி அவதியாகப் போகிறவர்கள் எவரும் சில கணங்களாயினும் நின்று அந்த நாயின் கோல அழகை இரசிக்கத்தவறவில்லை.

மிச்சம் மீதி பழையது என்றாலும் யூடாவுக்குப் பிடித்த - இச்சையான உயிரோடு கலந்த உணவு அதுதான். மச்சம் மாமிசம் எல்லாம் தாராளம்தான். பலபேருடைய அன்பை ஆதரவைப் பெற்ற அந்தச் சீவன் பாக்கியம் பெற்றதுதான். அந்தக் கடைக்கு அருகுமூலையில் ஒரு குப்பைமேடு. அந்தக் குப்பைகளோடு குப்பையாய் சில மிச்சம் மீதி இலைகள் கடதாசிகள் விழுந்து கிடக்கும். அதை எத்தனையோ நாய்கள் தவமிருந்து நக்கும். அவைகள் இதை, ஏக்கத்தோடு பார்க்கும். இவனுக்கு மட்டும் ஏனிந்த பாக்கியம், என்று புரியாமல் விழிக்கும்.

வயிறார சாப்பிட்டபின் யூடா நடையைக் கட்டும். இப்போது பை கனக்கிறது. ஆனால் இப்போது அதன் போக்கில் நிதானம் அவதானம் கடுமையாகவிருக்கிறது. சில கடைக்காரர், வீட்டுக்காரர் யூடா... யூடா... என்று கூப்பிட்டு பாண் துண்டையோ, பிஸ்கற்றுக்களையோ எறிவர்' சில சொறி நாய்கள் எரிச்சல் பொறாமையில் குரைத்துக் காட்டும். இப்போது இது ஒன்றையுமே திரும்பிப் பார்க்காது, முகம் வைத்த போருக்கு குறித்த இலக்கை நோக்கி போய்க்கொண்டே இருக்கும்.

பிரதான வீதியால் வந்து, வித்தியாலயம் வீதியால் திரும்பி நேரே போய் தனது வாசஸ்தலம் - சோமாஸ்கந்தர் இல்லத்தை அடைந்துவிடும். அகன்ற அந்த வாயில் அகலத் திறந்திருக்கும். அந்தத் தெருவின் இருகரையும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும். உள்ளே மண்டபத்தின் கதிரை வாங்குகளில் பல தரத்தாரும் வீற்றிருப்பர், தங்கள் வருங்காலத்தை அறியும் ஆவல் முகத்தில் தெரிய.

யூடா வாயிலைக் கடந்து வந்து முன்னே வந்து நிற்கும். எல்லோருக்கும் காட்சி கொடுக்கும். வந்திருப்போரெல்லாம் வினோதமாக இதன் கோலத்தைப் பார்ப்பார்.

சோமாஸ்கந்தர் மண்டபத்து அறைக் கதவை அகலத்திறந்து வைத்துக்கொண்டு நிரைப்படி ஒவ்வொருவராக அழைத்து சோதிடமோ குறிப்போ பார்த்துக் கொண்டிருப்பார். அவரும் யூடாவை விடக்கூட திருநீற்றை அங்கமெல்லாம் பூசி, பெரிய சந்தனப்பொட்டும் இட்டு, கழுத்தில் உருத்திராட்ச மாலையுடன் கொலு வீற்றிருப்பார். அவரைச்சூழ காளி முதல் அனுமான் வரை படங்கள் சிலைகள் கொலுவிருக்கும். அகல்விளக்கு எரிந்து

கொண்டிருக்கும், சந்தனக்குச்சி மணம் வீச அந்த ஸ்தானத்தில் அவரைப் பார்ப்பவர்க்கு பக்தி மரியாதை எல்லாம் ஏற்படும்.

யூடா, மாலையோடு பையையும் சுமந்துகொண்டு, கூடத்தில் இருப்போரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் எயமானனை நன்றாக தலையை நிமிர்த்தி பார்க்கும். "நான் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு வந்து நிற்கிறேன்" என்று சொல்லுவதுபோலிருக்கும், அதன் பார்வையும் முனகலும் துள்ளலும். ஐயர் யூடா... என்று மட்டும்தான் குரல்கொடுப்பார். அது புரிந்து கொண்டு தன் கடமையை நிறைவேற்றி வெற்றிகரமாக வந்துசேர்ந்ததை எயமான் ஏற்றுக்கொண்டார் என்ற திருப்தியில் வீட்டை சுற்றி பின்பக்கம் போகும், சாமான்களையும் பூமாலையும் அசைய.

பின்பக்கம் சமையல்கூடம் தனியாக இருக்கிறது. சிறிதாக இருந்தாலும் புனிதமாக இருக்கிறது! சமையல்காரி சற்று வயதானவள்தான் என்றாலும் சமையல் வேலை வீட்டு வேலைகளை ஓரளவு செய்வாள். யூடாவும் துணையாகும்.

யூடா வரப்போவதை அறிந்து அதன் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தாள். யூடா அவளை நோக்கி வந்துகொண்டிருந்தது. அது வழமையான காட்சிதான் என்றாலும் இப்போதும் அதன் அழகுக்கோலத்தை அவளால் இரசிக்காமல் இருக்க இயலவில்லை. இது அவள் முன்போய்நின்று வாலை மட்டும் மெள்ள ஆட்டுக்கொண்டு நின்றது. வேறு எந்த மரியாதைக்குரிய செயற்பாடுகள் எதுவும் செய்யவில்லை! "வேலைக்காரிதானே" என்ற இளக்காரம் அதற்கும் இருக்கிறது போலும். அவளும் பூமாலைக்குச் சேதமில்லாமல் மெள்ளப் பையைக் கழற்றி எடுத்தாள். அடுப்படியுள் உள்ளிட்டாள். யூடா அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. அடுக்களையையே பார்த்துக்கொண்டு நின்றது.

அதன் நாக்கிலிருந்து நீர் சுரந்து கொண்டிருந்தது. எதையோ எதிர்பார்ப்பது போல் தெரிகிறது. அது எதிர்பார்த்தபடியே வேலைக்காரி இரு கரத்திலும் இரண்டு சட்டிகளை ஏந்தி வந்தாள். ஒரு கரத்தில் பழைய கறியும் காலைச் சாப்பாட்டில் எஞ்சியதும், மறுகரத்தில் சோறு வடித்த கஞ்சி. இன்னும் சூடாறவில்லை. அதில் ஒரு பிடி, இதில் ஒரு குடியாக தின்று குடித்து முடித்து வாலை ஆட்டிக்காட்டிவிட்டு சென்றது.

யாரென்றாலும் வாலை ஆட்டி நன்றி தெரிவிக்காமல் விடாது இந்த நாய்க்குலம். குட்டியிலுருந்தே சைவச்சாப்பாட்டையே தின்றுவளர்ந்த நாயது. எந்தச் சாப்பாடென்றாலும் மனதார வதவத என்று சாப்பிடும்.

சமையல் கூடத்திலிருந்து முன் முகப்புக்கு வந்த இந்தநாய், கூடத்துடன் இருப்போரை எல்லாம் நிமிர்ந்து பார்த்து வாலை ஆட்டிக் காட்டி தன் வரவேற்புரையை வாசித்தது.

பின்னர் உள்ளறையில் காரியத்தோடு இருக்கும் தன் எயமானுக்கு முனகிக் காட்டி தன் மகிழ்ச்சியையும் இருப்பையும் தெரிவித்துவிட்டு அவர் கண்டாரோ ஏற்றுக் கொண்டாரோ என்ற அக்கறையில்லாமல் திரும்பியது. திரும்பி, உடம்பை சிலிர்த்து உதறிக்கொண்டு வாயிலோரமாக இதற்காகவே கட்டப்பட்டிருக்கும் சீமெந்து கட்டில் ஏறிப்படுத்துக் கொண்டது.

கண்கள் மூடியிருக்கும், ஆனால் அறிதுயில்தான். வாயிலைக் கடந்து யார் வந்தாலும் உடனேயே அவர்கள் முன்நின்று வரவேற்புரை கூறும். முகத்தின் பிரகாசம். கண்களின் ஒளி. மாலையும் திருநீறும் சந்தனம் குங்குமமும் சேர்ந்து வருவோர்க்கு கைலாகு கொடுத்து வரவேற்பதாகவே இருக்கும்.

தாங்கள் வந்த காரியத்தை முடித்து போகிறவர்களுக்கும் பிரியாவிடை கொடுத்து அனுப்பி வைக்கும். மற்றப்படி அந்த சீமென்று மேடையே தஞ்சமென்று கிடக்கும்.

இந்த நாய் குரைப்பது மிகவும் குறைவு. எப்போதாவது குப்பை அகற்றுபவர்கள் குப்பை வண்டியோடு வந்து கதவைத் தட்டுவார்கள். அவர்கள் கோலம் இதற்கு வித்தியாசமாகப்படும். அப்போதுமட்டும் இதன் சிம்மக்குரல் ஒலிக்கும். அவர்கள் குப்பை அள்ளி போகும்மட்டும் இது சுற்றுவட்டாரம் எடுபட குரைத்துக்கொண்டே இருக்கும். அனேகமாக இதன் வாலுக்குத்தான் வேலை.

மேடையில் படுத்திருக்கும்போது, யூடா... யூடா, என்று குரல் கேட்டது. யூடாவின் செவிகள் மேலுமுயர்ந்தது. இது வேலைக்காரியின் குரல் அல்ல. எயமானியம்மாவின் குரல். இந்தக்குரல் வந்த திசைநோக்கிப் போனது நடந்தல்ல, வேகமாக ஓடிப்போனது. கூடத்தின் மற்றப்பகுதியால் கூடத்தைச் சுற்றி பின்பகுதிக்குப் போனது. அங்கே அது எதிர்பார்த்த மாதிரி பின்னறை வாயிலில் அந்த அம்மாள் நின்றிருந்தாள். அவள் கையில் ஒரு தடி. தடியைக் கண்டு யூடா மிரளவில்லை. வாஞ்சையோடு கைத்தடியை கவ்வியது. பாவம் அந்த அம்மாளுக்கு கண்பார்வை மங்கலாகிவிட்டது. இந்தத் தடியும் நாயும்தான் அவவுக்கு வழிகாட்டிகள்.

அந்த அம்மாள் தடியை ஒரு முனையில் பிடித்துக்கொள்ள, இந்த நாய் மறுமுனையைக் கவ்வி மென்னடை பயின்று பக்குவமாகக் கூட்டிச் சென்றது. கிணற்றடிக்கு கூட்டிச் சென்று விட்டது. அம்மையார் நீராடப் போகிறார்.

அவர் சொல்லாமலேயே, கப்பியில் தொங்கும் வாளிக் கயிற்றை பலமாக பல்லால் கௌவிக்கொண்டது. அவ்வாளியை கிணற்றுள் தள்ளிவிட்டா. நீரைக் கோலிக்கொண்டதும், யூடா இழுத்துச்சென்றது. வாளி கட்டுக்கு மேலால் வந்ததும், அம்மாது வாளியைப் பற்றி பக்கத்துத்தொட்டியில் இறைப்பார். யூடா முன்னோக்கி வந்து மறுபடி இழுத்துச்செல்லும். இப்படியே சிலநேரம் நடக்கும். தொட்டி நிரம்பிவிடும்.

யூடா பிடியை விட்டுவிட்டு சலவைக்கல்லில் ஏறிப் படுத்துக்கொள்ளும். அம்மாதுவின் ஒவ்வொரு அசைவையும் பார்க்கும்படியாக மூஞ்சியை வைத்துக்கொண்டு கிடக்கும். அம்மாது மஞ்சள் தேய்ப்பது, கழுவுவது, குளிப்பது, ஆடை மாற்றுவது. என்று எல்லாக் கோல அழகையும் இந்த நாயைத் தவிர வேறு எந்த நாய்ப்பயலாலும் பார்க்கமுடியாது.

அய்யரம்மாவின் நீராடல் திருப்தியாக முடிந்ததும் யூடா தடியைக் கௌவி அறை வாசலில் பக்குவமாக கொண்டுபோய் விடும். வாலை ஆட்டிக்காட்டிவிட்டு விடைபெறும்.

முன்னால் வந்து தன் இருப்பிடத்தில் படுத்துக்கொள்ளும். எல்லா நாய்களும் மோப்பசக்தியால் தான் இயங்கும். இந்த நாய் செவியைத்தான் நிமிர்த்தி கூர்மையாக வைத்துக்கொள்ளும். அழைப்பாணைக்கு மட்டுமல்ல வித்தியாசமான குரலொலி எங்கு கேட்டாலும் பாய்ந்து செல்லும்! வீட்டிலுள்ளோரைச் சுற்றித்தான் அதன் கவனமெல்லாம் இருக்கும்! தெருவால் போகும் நாய்களை அது நாயாகவே மதிப்பதில்லை.

வேலைக்காரியும் அய்யரம்மாவும், ஐயரும் இடைக்கிடை அழைப்பாணை விடுப்பர். இப்போது அய்யரம்மாவின் குரல் மீண்டும் ஒலிக்கிறது. யூடா அங்கு ஓடிச்செல்கிறது. அவர்தடியால் திசையைக் காட்ட அதற்கு விளங்கிவிட்டது. அடிமூலையில் இருக்கும் மலகூடம் நோக்கி அழைத்துச்சென்றது.

இப்போது யூடா வழக்கமான கோலத்துடன் மாலையும் சாமான் பையும் அசைய வித்தியாலயம் வீதியால் வந்து கொண்டிருக்கிறது வீடுநோக்கி. நாயின் கோலத்தில் போக்கில் எந்த வித்தியாசமும் இல்லை, வழமைபோலவே இருக்கிறது. ஆனால் இன்று அந்தத்தெரு வழமைபோல இல்லை. தெரு வாசலில் யாரையும் காணோம். சொறி நாய்களையும் சொறிச் சேட்டைகளையும் காணோம்.

வழமைக்கு மாறான சூழலை பெரிது படுத்தாமல் தன்பாட்டில் வழமைபோல தன் கடமையை நிறைவேற்றும் உற்சாகத்தோடு போய்க்கொண்டே இருந்தது. சற்று தூரத்தில் ஒரு பெரிய வாகனமொன்று கூடாரம் போட்டு நின்று கொண்டிருந்தது. யூடா இதைப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. தன் அனுபவத்தில் இதைவிட பாரிய பாரவண்டிகளை பார்த்திருக்கும். அந்த வாகனத்தை நெருங்குவதற்கிடையில் ஒரு நீண்ட தடியில் இருந்து கம்பிச்சுருக்கு அதன் கழுத்தை வளைத்து இறுக்கிக்கொண்டது. அது எம்பிப்பாய்ந்தது. சுருக்கிட்டவனை நோக்கி, அதற்கிடையில் மறுபக்கத்தில் இருந்தவன் தடியால் சுருக்கிட்டான். இருவருமாகச் சேர்ந்து கூடார வண்டிக்கு அதை இழுத்துச் சென்றனர். பாவம் யூடா, கால்கள் பாவ பூமாலையோடு பையும் தேய இழுபட்டுப் போனது. இருவருமாக தூக்கித்தள்ளி விட்டனர் வாகனத்துள்.

அங்கே அந்த வட்டார நாய்களோடு இதுவும் சங்கமமாகியது. என்றாலும் அது தனித்தே தோன்றியது. என்றாலும் எல்லாவற்றுக்கும் முடிவு ஒன்றுதான்.

கம்பி வலையால் மூடப்பட்ட அந்த வாகனம் மெல்ல புறப்பட்டது. யூடா வழமையாக போகும் வழியால்த்தான் அந்த வாகனமும் செல்கிறது. அய்யர் வீடு வந்துவிட்டது. இந்த நாய் இரண்டு முன்னங்கால்களையும் மேலே உயர்த்தி கம்பி வலையைப் பிடித்துக்கொண்டு முக்கி முனகி முசிமுசி குரலெலுப்புகிறது. "அடேய், மோட்டுப் பயல்களே! கொஞ்சம் பொறுங்கடா.. இந்தச் சாமான் பையை என்ர வீட்டில கொடுத்து விட்டு வாறேன்..." என்று சொல்கிறது. அதைப் புரிந்துகொள்ளாத வாகனம் புரிந்து கொண்டாலும் இரக்க மில்லாத வாகனம் அரக்கத்தனமாக உறுமிக் கொண்டு செல்கிறது!!!

# பரம ரகசியம்

● கா. தவபாலன் - மொறட்டுவ

மங்களகரமாக நடைபெற்றது
எங்கள் ஊர்
அம்மன் ஆலயத்தில்
பொங்கல் உற்சவம்!

கச்சான் கடலையும்
லட்டும் சாப்பிட்டு
சோடாவும் குடித்து
மகிழ்ந்தோம்
அம்மனை வழிப்பட்டு!

அப்பா வாங்கித் தந்தார்
பொம்மைப் பாப்பாவும்
அழகான சப்பாத்து ஜோடியும்
துப்பாக்கியும்
றப்பர் கிளியும்!

அழுது அடம்பிடித்தேன் நான்..
பொய்மைக் கார் ஒன்றும்
வாங்கித் தரச்சொல்லி...

இரண்டு நாட்களில் உடைந்துவிடும்
பொம்மைக்கார் வேண்டாமென்று
மறுத்துவிட்டார் அப்பா.. ஆனால்
அவர் புரிந்துகொள்ளவேயில்லை
என் மனசு உடைந்து போனதை!

இன்று..
பேரப் பிள்ளைகளுக்கு பரிசாக
நான் வாங்கிக் கொடுப்பது
பொம்மைக் காரையே என்பது
நான் மட்டுமே அறிந்த
பரம ரகசியம்!!!

# ஈசன் சிரிக்கிறான்

## உருவகக் கதை

● எஸ். முத்துமீரான்

எங்கும் பயங்கரம். அண்டம் அசைந்தது. புயல்காற்று பயங்கரமாக ருத்திர தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. மக்கள் பயத்தால் நாலா பக்கமும் சிதறி ஓடிக்கொண்டிருந்தனர். மரங்களெல்லாம் புயலின் சீற்றத்தைத் தாங்க முடியாமல் முறிந்து உடைந்துகொண்டிருந்தன. பிராணிகளும், பறவைகளும் உயிருக்கு அஞ்சி செய்வதறியாது திசை தெரியாமல் சிதறித் திரிந்தன. மக்களின் வீடுகள் உடைந்து அழிந்துகொண்டிருந்தன. புயல் அண்டத்தை ஆட்டிக் கொண்டிருக்கும் களிப்பில் எக்காளமிட்டு சிரித்துக்கொண்டிருந்தது. திமிர் பிடித்த புயல், மரங்களும் பிராணிகளும் அதன் கோர வெறியால் உடைவதையும் ஓடுவதையும் பார்த்துப் பார்த்து மேலும் மேலும் தன் வேகத்தைக் கூட்டிக்கொண்டிருந்தது. இப்போது மக்கள் சிந்தை குலைந்து ஈசனிடம் கெஞ்சினர். மன்றாடினர்.

'இறைவா எங்களைக் காப்பாற்று. இந்தப் பயங்கரப் புயலிலிருந்து எங்களைக் காப்பாற்றி உயிர்ப் பிச்சை தந்துவிடு'

மக்களின் மன்றாட்டம் மேலும் விரிவடைந்து கொண்டிருந்தது. ஈசன் நேத்திரங்களை மூடி நிஷ்டையில் அமைதியாக இருந்தான்.

அப்பொழுது, கோரைப் புல்லொன்று புயலுக்கு கிஞ்சித்தும் அஞ்சாது நின்று கோரத் தாண்டவமாடும் புயலைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தது. எண்ணற்ற மரங்களையும் செடிகளையும் சின்னாபின்னமாக்கி சிதைத்துக்கொண்டிருக்கும் புயலுக்கு அற்ப கோரைப் புல்லை அசைக்க முடியாமல் இருப்பது பெரும் அவமானமாகப் போய்விட்டது. புயல் புல்லின் இறுமாப்பையும், திமிரையும் பார்த்து மீண்டும் தன் வேகத்தைக் கூட்டி, புல்லை அழிக்கத் துடித்தது. கோரப் புல் எதற்கும் அஞ்சாது, புயலையும் அதன் அறியாமையையும் எண்ணி அமைதியாக நின்றது. புயலின் ஆத்திரம் அதன் சென்னியைத் தாண்டியது. மறுகணம், புயலின் ஆட்டத்திற்கெல்லாம் அசையாது நிற்கும் புல்லைப் பார்த்து புயல்,

'ஏ அற்பப் புல்லே என் சக்தியின் முன்னே இந்த அண்டமே ஆடிக்கொண்டிருப்பதை நீ கண்டுமா எனக்குப் பயப்படாமல் தலைநிமிர்ந்து சிரிக்கிறாய்? திமிர் பிடித்த நாயே! உன்னை நான் அழிக்காமல் விட

மாட்டேன் என் பலம் எவ்வளவு உறுதியானது என்பது உனக்குத் தெரியுமா? என் முன்னால் உன் சக்தி ஒரு தூசி என்பதை மறந்து விடாதே' என்று கூறி அசையாமல் நிற்கும் கோரைப் புல்லை அழித்துவிட, புயல் தன் பலத்தையெல்லாம் கூட்டி பயங்கர சப்தத்துடன் வீசியது. கோரைப் புல் புயலின் வேகத்துக்கு ஏற்றாற்போல அசைந்து மண்ணில் விழுந்து ஈசனைத் துதிப்பதும் மீண்டும் எழுவதுமாக நின்று ஆடிக்கொண்டிருந்தது. புயலால் கோரைப் புல்லை எதுவுமே செய்ய முடியவில்லை. பாவம்! கோரைப் புல்லை அழித்துவிட முடியாத புயல் சில மணி நேரங்களில் அமைதியாகிவிட்டது. மரங்களையும், மிருகங்களையும், மனிதர்களையும் அடித்து நொறுக்கி சிதைத்து சீரழித்துவிட்ட அகோரப் புயல், ஒரு சிறு புல்லிடம் தோல்வியடைந்து வெட்கித் தலைகுனிந்து நிற்பதைப் பார்த்து ஈசன் சிரித்தான். எல்லாச் சக்தியிலும் தன் சக்தியே மேலென்று தலைக்கனம் பிடித்து பேயாட்டம் ஆடிய புயல் இறைவனிடம் மண்டியிட்டுப் பிரார்த்தித்தது.

'இறைவா இது என்ன புதுமை? உலகையே கபளீகரம் செய்த என்னால் இந்த அற்பக் கோரைப் புல்லை அசைக்க முடியவில்லையே! இதன் மர்மமென்ன? எல்லாச் சக்தியிலும் பார்க்க என் பலமே மேலென்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு ஏன் இந்தத் தோல்வி? என் சக்தியில் என்ன குறைபாடு?' என்று புயல் கேட்டு அமைதியடைந்து அடங்கிவிட்டது. எங்கும் நிசப்தம். புயலின் கோரத் தாண்டவத்தாலும் அதன் அட்டூழியத்தாலும் அழிந்து கிடந்த அண்டம் அழுதுகொண்டிருந்தது. எல்லாச் சக்திகளுக்கும் மேலான சக்தியான இறைவன், புயலின் பிரார்த்தனையில் நேத்திரங்களைத் திறந்து அண்டத்தைப் பார்த்தான்.

விரல் நொடிக்கும் நேரம்..

புயலின் கோரத் தாண்டவத்தால் அடிபட்டு அல்லலுற்று பசியால் கிடந்த மாடொன்று, ஓடி வந்து பச்சைப் பசேலென்று நிமிர்ந்து நின்ற கோரைப் புல்லைக் கடித்து அசைபோட்டுக்கொண்டிருந்தது. கருணையே வடிவான இறைவன் சிரிக்கிறான். அவன் சிரிப்பில் தத்துவங்கள் முகிழ்விட்டுக் கொண்டிருக்கின்றன!!!

**வாசகர் கவனத்திற்கு**

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

# தாய்க்கு ஒரு மடல்

● கெக்கிராவ சாஜஹான்

அன்புள்ள அம்மா....
உன் சுகம், நலம் அறிய...,
அளவிலா ஆவல் எனக்கு - உன்
அன்பு மகள் நான்
பக்கத்தில் இல்லாதபோதும் - நீ...
எப்படி இருக்கின்றாய் தாயே!
உன் பிஞ்சுகளாம் - என்
தம்பியும், இரு தங்கைகளும்
நலமாக உள்ளனரா?
கல்யாணமாகிப்போய்விட்ட
அக்காவும், அண்ணாவும்
வந்து போவதுண்டா?

நீண்ட நாள்களாய் - என்
மடல் காணாத உன் கண்கள்
உறங்கி இருக்காதென்பது
எனக்குத் தெரியும்
மூன்று மாதங்களுக்கொரு முறை
என் பிஞ்சு விரல்கள் வரையும்
காகிதம்தான் உன் மனதுக்கு
அமைதியளிக்கும் என்பதும்
தெரியும்!

எழுதவும் கற்றுத் தந்தாய்,
ஒழுக்கமும் ஊட்டிவிட்டாய்
பிணங்களும் பின்னால் அலையும்
பணத்துக்கு வழியில்லாமல்
கடல் கடந்து வந்துவிட்டேன்
கலையிழந்து வாடுகின்றேன்!

அறபு நாட்டு அரக்கர்களின்
அடிமையாகிப் போன பின்னால்
நான் காணும் இன்னல்கள்
எழுத்தினில் அடங்காதம்மா
மனம்விட்டுச் சொல்லிவிட்டால் - நீ
உயிர்விட்டுப் போய்விடுவாய்
என்பதனால்
இத்துணை நாளும்
மடலே எழுதவில்லை..
இங்கென்றால்
நன்று என்ற சொல்லே
நாறித்தான் கிடக்கிறது!

எஜமானின் அப்பா
ஏலாத கிழவன்தான்
நாளும் அவனைக் குளிப்பாட்ட
நான்தான் பலிக்கடாவாம்
குளிப்பாட்டவும் வேண்டும் - உடல்
குளிர் ஆற்றவும் வேண்டும்!

எஜமானின் வீட்டு
கனவான்களுக்கு
சமைத்துத்தான் கொடுக்கின்றேன்
வயிற்றுப் பசியாற்றவும்
உடற் பசியாற்றவும்
என்னைத்தான் நாடுகின்றான்
ஒருவன் மாறி ஒருவன்!

செத்துப்போன உடலுக்குள்ளே
ஒரு குற்றுயிராய் வாடுகின்றேன்
கலங்கிவிடாதே தாயே...!

என்றோவொரு நாள்
விடுதலை கிடைத்தால்
வந்து சேருகின்றேன் - உன்னையும்,
உன் பிஞ்சுகளின் முகங்களையும்
இறுதியாக ஒருமுறை பார்த்துவிட..
நீ கற்றுத்தந்த ஒழுக்கத்தை
தெருவிலே விட்டவளாய்..
என்னை மன்னித்துவிடம்மா!!!

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

திருமதி சுகிலா ஞானராசாவின் நேர்காணலை ஏந்தி வந்த பூங்காவனம் இதழை வாசித்தேன். மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. தொடர்ச்சியாக காலம் தவறாமல் பூங்காவனம் இதழ் வெளிவந்துகொண்டிருக்கின்றமை சாதனைக்குரிய விடயம். அதை பெண்கள் வெளியிடுவது மிகவும் பூரிப்படையச் செய்கின்றது. இதுவரை 22 இதழ்கள் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. பெண்களின் நேர்காணல்கள் ஒவ்வொரு இதழ்களிலும் வெளிவருவது மகிழ்ச்சி. ஆண்களது நேர்காணலையும் இனி வரும் காலங்களில் காணக் கிடைக்குமோ? ஆசிரியர் குழாத்திடம் ஒரு ஆலோசனையை மட்டுமே முன்வைத்துள்ளேன். பெண்களின் அட்டைப் படத்தை மாத்திரம் காணும் போது கொஞ்சம் பொறாமையாக இருக்கிறது. தொடர்ச்சியாக பூங்காவனம் பூத்துக் குலுங்க வாழ்த்துக்கள்!!!

**எம்.எம்.எம். மாஹிர் - கண்டி**

பூங்காவனம் இதழ் கிடைத்தது. அட்டைப் படத்தில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி. சுகிலா ஞானராசாவை கௌரவப்படுத்தியமைக்கு எமது திருமலை மண் பெருமை கொள்கிறது. அத்துடன் கவிஞர் ஏ. இக்பால் அவர்களின் இலக்கிய அனுபவ அலசல் பல அருமையான தகவல்களை அறிய வைக்கின்றது. அதேபோன்று இதழில் இடம்பெற்றுள்ள கவிதைகள், சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் மற்றும் ஏனைய அசங்கள் சிறப்பாக உள்ளன. பிரதம ஆசிரியரதும், துணை ஆசிரியர்களதும், ஆலோசகரதும் பல்வேறு துறை சார்ந்த முயற்சிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஷெல்லிதாசன் - திருகோணமலை**

பூங்காவனம் இதழ் 22 ஐப் பார்த்ததும் முதலில் அதிர்ச்சியடைந்தேன். சிறுகதைப் பட்டியலில் எனது பெயர் இல்லை. எனினும் குறுங்கதைகள் பட்டியலில் எனது பெயர் கண்டு ஆனந்தமடைந்தேன். இந்த இதழில் வெளிவந்த கிளை இழந்த விருட்சங்கள் என்ற சிறுகதை பதற வைத்தது. யதார்த்தமான கதை. இதை எழுதிய பூங்காவனம் இதழின் துணை ஆசிரியர் எச்.எப். ரிஸ்னா பாராட்டுக்குரியவர்.

**எஸ்.ஆர். பாலசந்திரன்**


# நூலகப் பூங்கா



நூலின் பெயர் - கண்ணாடிக் குளத்துக் கவிதை
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஜே. வஹாப்தீன்
வெளியீடு - ஷம்ஸ் வெளியீட்டகம்
விலை - 250 ரூபாய்





நூலின் பெயர் - நெஞ்சினிலே
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஏ.எம். கஸ்புள்ளா
வெளியீடு - பேனா பப்ளிகேஷன்
விலை - 200 ரூபாய்





நூலின் பெயர் - விடியலைத் தேடும் புதுயுகப் பெண்கள்
நூலின் வகை - கட்டுரைகள்
நூலாசிரியர் - சந்திரகாந்தா முருகானந்தன்
வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 60 இந்திய ரூபாய்




நூலின் பெயர் - வேள்வித் தீ
நூலின் வகை - கவிதைகள்
நூலாசிரியர் - சந்திரகாந்தா முருகானந்தன்
வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 40 இந்திய ரூபாய்





நூலின் பெயர் - இனி வானம் வசப்படும்
நூலின் வகை - சிறுகதைகள்
நூலாசிரியர் - டாக்டர் ச. முருகானந்தன்
வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம்
விலை - 60 இந்திய ரூபாய்




நூலின் பெயர் - அம்மாவாகப்போகும் நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை
நூலின் வகை - மருத்துவ கட்டுரைகள்
நூலாசிரியர் - டாக்டர் ச. முருகானந்தன்
வெளியீடு - ஈஸ்வரன் பிரசுரம்
விலை - 250 ரூபாய்





நூலின் பெயர் - உன் அருமை அறியாமல் போனேனே அம்மா!
நூலின் வகை - சிறுகதைகள்
நூலாசிரியர் - டாக்டர் ச. முருகானந்தன்
வெளியீடு - ஈஸ்வரன் பிரசுரம்
விலை - 350 ரூபாய்





நூலின் பெயர் - கோடை மழை
நூலின் வகை - சிறுகதைகள்
நூலாசிரியர் - டாக்டர் ச. முருகானந்தன்
வெளியீடு - ஜீவநதி பதிப்பகம்
விலை - 250 ரூபாய்




நூலின் பெயர் - அனைத்தும்
நூலின் வகை - கட்டுரை
நூலாசிரியர் - முருகேசு ரவீந்திரன்
வெளியீடு - அன்ரா அச்சகம்
விலை - 300 ரூபாய்




நூலின் பெயர் - நிலவு நீரிலும் தெரியும்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - முருகேசு ரவீந்திரன்
வெளியீடு - அன்ரா அச்சகம்
விலை - 300 ரூபாய்




நூலின் பெயர் - அக்கினிக் குஞ்சு
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - கனிவுமதி
வெளியீடு - கனிதா பதிப்பகம்
விலை - 200 ரூபாய்



சஞ்சிகையின் பெயர் - படிகள்
ஆசிரியர் - எல். வஸீம் அக்ரம்
வெளியீடு - படிகள் பதிப்பகம்
தொலைபேசி - 0770888048
விலை - 100 ரூபாய்

# பூங்காவனம் அறிமுக விழா

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் இலக்கிய சஞ்சிகைகளை அறிமுகம் செய்யும் திட்டத்தை ஓய்வுநிலை வரி மதிப்பாளரும் இலக்கிய கர்த்தாவுமாகிய கா. தவபாலன் அவர்கள் 18.10.2015 ஞாயிற்றுக் கிழமை மாலை தனது தண்ணீரூற்று இல்லத்தில் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பூங்காவனம் சஞ்சிகையின் 22 ஆவது இதழ் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அரசாங்க உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பெருந்தொகையான இலக்கிய ஆர்வலர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தேநீர் விருந்துபசாரத்தைத் தொடர்ந்து கா. தவபாலன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.





**With Best Compliments From:-**

FIVE STAR TEXTILES

**FIVE STAR TEXTILES CENTRE**

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

**No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.**
**Tel :- 011 2441810, 2345280, 2441809**
**Fax :- 94 - 1 - 2345184 / 2582453**
**E-mail :- shafeeka@sltnet.lk**

**With Best Compliments From:-**

**( MG )** *Marine Grand*
*Banquet Hall*

**No. 41, Station Avenue, Marine Drive, Colombo - 06.**
**Tel :- 011 4443833, 011 2585854, 011 2595205**
**Fax :- 011 2595845**
**Website :- marinegrandbanquethall.com**

*Galle Caterers Group*

With Best Compliments From...




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9 772012 670007

Designed By - H.F. Rizna